வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 11.07.2025 வெள்ளிக்கிழமை இதழ் : 192 பக்கங்கள் : 12




## அரியாலை மனித புதைகுழி:

# இதுவரை 65 எலும்புக்கூடுகள் மீட்பு: அகழ்வுகள் தற்காலிகமாக நிறுத்தம்!

- பு.கஜிந்தன், த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஜூலை 11

**அரியாலை மனிதப் புதைகுழியின் அகழ்வு பணிகள் நேற்றுடன் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. இந்த மனிதப் புதைகுழியிலிருந்து நேற்றுவரை 65 மனித எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்டவற்றில் சிறுவர்களின் எலும்புக்கூடுகளும் அடங்கும்.**



அரியாலை - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழியில் இரண்டாவது கட்ட அகழ்வில் நேற்றுமுன்தினம் வரை 63 எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டு, மீட்கப்பட்டிருந்தன. இந்த நிலையில், 15ஆவது தினமாக நேற்று வியாழக்கிழமையும் அகழ்வு பணி முன்னெடுக்கப்பட்டது. இதன்போது 2 மனித எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டு, அவையும் அகழ்ந்து எடுக்கப்பட்டன.

இந்த மனிதப் புதைகுழியில் தொடர்ச்சியாக 15 நாட்கள் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், நேற்று வியாழக்கிழமை மதியத்துடன் அந்தப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. மீண்டும் அகழ்வு பணிகளை எதிர்வரும் 21ஆம் திகதி முதல் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதனிடையே, இரு கட்டங் களாக 24 நாட்கள் மேற்கொள்ளப்பட்ட

11

## பால்மா விலை அதிகரிப்பு!

கொழும்பு, ஜூலை 11

இறக்குமதி செய்யப்படும் 400 கிராம் பால் மா பைக்கெற்றின் விலை 100 ரூபாயால் அதிகரித்துள்ளது. இலங்கை பால் மா இறக்குமதியாளர்கள் சங்கம் இந்த விலை உயர்வை அறிவித்துள்ளது.

உலக சந்தையில் பால் மாவின் விலை 25 சதவீதம் முதல் 30 சதவீதம் வரை அதிகரித்துள்ளது. இதனையடுத்தே நாட்டின் பால் மா விலையும் உயர்த்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி, 400 கிராம் பால் மா பைக்கெற்றின் புதிய விலை 1,200 ரூபாயாகும். 1 கிலோ கிராம் பால் மாபைக் கெற்றின் விலை 250 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

# இலங்கைக்கு 100 கோடி டொலர் உதவியாக வழங்கியது இந்தியா

கொழும்பு, ஜூலை 11

இலங்கைக்கு 100 கோடி அமெரிக்க டொலர்கள் பெறுமதி யான நிதி நிவாரணத்தை இந்தியா வழங்கியுள்ளது.

இந்திய ரிசர்வ் வங்கி, இலங்கை மத்திய வங்கி இடையேயான சிறப்பு பரிமாற்ற ஏற்பாட்டின் கீழ், மீதமுள்ள நிலுவைத் தொகையைப் புதுப்பித்து இந்த 100 கோடி அமெரிக்க டொலர் நிதி நிவாரணத்தை இந்தியா வழங்கியுள்ளது.


இலங்கையின் மொத்த அதிகாரபூர்வ இருப்பு 600 கோடி அமெரிக்க டொலர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதில், ஒரு பகுதி சீன விதிமுறைகளால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனால், இந்தியாவின் தற்போதைய உதவி மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

பொருளாதார நெருக்கடி உச்சத்திலிருந்தபோது இந்தியா 400 கோடி டொலர்களை இலங்கைக்கு வழங்கியிருந்தது.

இதைத் தொடர்ந்து இந்தியா இலங்கைக்கு அளித்த நிதி உதவி 700 கோடி டொலர்களை கடந்துள்ளது.

இதில் 80 கோடி அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமானவை மானியங்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(அ-ஐ)



## பிரபாகரனின் பதுங்கு குழி அகழ்வில் தகரங்களே மீட்பு

### தோண்டும் பணிகள் நிறுத்தம்

முல்லைத்தீவு, ஜூலை 11

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பயன்படுத்தினார் என்று கூறப்படும் பதுங்கு குழியில் முன்னெடுக்கப்பட்ட அகழ்வில் தகரங்கள் மட்டுமே கிடைத்தன. இதைத் தொடர்ந்து அங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வு இடைநிறுத்தப்பட்டது.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு - 8ஆம் வட்டாரம் - மந்துவில் கிராமத்தில் புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்கு அருகிலுள்ள காணியை போர் காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள்

11

## அமெரிக்க தீர்வை வரி:

## அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஜனாதிபதி ஆராய்வு

கொழும்பு, ஜூலை 11

முன்னர் விதிக்கப்பட்ட அமெரிக்க தீர்வை வரி 44 வீதத்திலிருந்து 30 வீதமாகக் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து அடுத்து முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க பிரதிநிதிகளுடன் நேற்று வியாழக்கிழமை பேச்சு நடத்தினார்.

ஜனாதிபதி பணிமனையில் முன்னெடுக்கப்

11



## விகாரைக்கு எதிராக நேற்றும் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூலை 11

தையிட்டி விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று வியாழக்கிழமையும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பூரணை தினமான நேற்று காலை ஆரம்பமான இந்தப் போராட்டம் மாலை வரை தொடர்ந்தது.

"தமிழ் மக்களின் காணிகளில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரை அகற்றப்படவேண்டும். அந்தக் காணிகளை உரிமையாளர்களிடமே ஒப்படைக்க வேண்டும்", என்ற வலியுறுத்தலுடன் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தில் பொதுமக்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான செ. கஜேந்திரன், சந்திரகுமார், சட்டத்தரணி காண்டீபன், பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

(ஐ)

## மன்னார் விபத்தில் 4 வயது சிறுவன் பலி

### குடும்பத்தினர் மூவர் படுகாயம்

மன்னார், ஜூலை 11

மன்னாரில் இடம்பெற்ற விபத்தில் 4 வயது சிறுவன் உயிரிழந்தார். அவரின் தாய், தந்தை, தமக்கை ஆகியோர் படுகாயமடைந்தநிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து மன்னார் - நானாட்டான் பிரதான வீதியில் நறுவிலிக்குளம் பகுதியில் நேற்று வியாழக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

குடும்பத்தினர் நால்வரும் ஒரு மோட்டார் சைக் கிளில் நானாட்டான் நோக்கி பயணித்திருந்தனர்.

அப்போது, எதிர்த் திசையில் இருந்து வந்த பட்டா ரக வாகனம் மோட்டார் சைக்கிளை

11

## அமெரிக்காவுடன் பேசுங்கள் ஒத்துழைப்பு வழங்க தயார்!

### எதிர்க்கட்சி அறிவிப்பு




கொழும்பு, ஜூலை 11

இலங்கைக்கு விதிக்கப்பட்ட வரியை 44 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாகக் குறைப்பதாக அமெரிக்கா அதிகரித்துள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும். இதனை சிறந்த ஆரம்பமாகக் கருதி மீண்டும் அமெரிக்காவுடன் பேச்சுகளை முன்னெடுக்கவேண்டும். அரசியலுக்கு அப்பால் இந்த விடயத்தில் அரசாங்கத்துக்கு

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்று பிரசித்திபெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் தீர்த்தத் திருவிழா நேற்று நடைபெற்றவேளை...!

# அணையா விளக்கு போராட்ட கோரிக்கைகள் தீர்மானமாகின!

## சாவகச்சேரி பிரதேச சபை நிறைவேற்றியது

யாழ்ப்பாணம், ஜூலை 11

அணையா விளக்கு போராட்டத்தின் 6 அம்ச கோரிக்கைகள் சாவகச்சேரி பிரதேச சபையில் ஏகமனதாக தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.


சபையின் முதலாவது அமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது, உபதவிசாளர் இ. யோகேஸ்வரன் முன்வைத்த கோரிக்கையின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன்படி, அரியாலை - சித்துப்பாத்தி உள்ளிட்ட மனித புதைகுழிகள் தொடர்பில் ஐ. நா. மனித உரிமை ஆணையாளரின் பணிமனையின் கீழ் இயங்கும் இலங்கை பொறுப்புக்கூறல் செயல்திட்ட அதிகாரிகள் தொழில்நுட்ப ரீதியான உள் ளீட்டை வழங்கவும் கண்காணிப்பில் ஈடுபடவும் இலங்கை அரசாங்கம் அனுமதிக்க வேண்டும், ஐ. நா. மனித உரிமை பேரவையின் 46/1 தீர்மானத்துக்கமைய இனப்படுகொலை, யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் ஆதாரங்களை சேகரிப்பதற்கு ஐ. நா மனித உரிமை ஆணையாளரின் பணிமனையின் கீழ் இயங்கும் இலங்கை பொறுப்புக்கூறல் செயல்திட்ட அதிகாரிகளுக்கு தங்கு தடையற்ற அனுமதி இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட வேண்டும்.

மனித புதைகுழி அகழ்வுப் பணிகளில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தமது சமூகத்தின் வளங்களை பெற்று அதன் மூலம் சுதந்திரமான தொழில்நுட்ப உள்ளீட்டைப் பெற்றுக் கொள்ள இலங்கை அரசாங்கம் அனுமதிக்குமாறு அழுத்தம் வழங்க வேண்டும், புதைகுழி அகழ்வுப் பணி தொடர்பில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றால் கோரப்படும் அனைத்து நிதி கோரிக்கைகளையும் இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இதுவரை வெளிவந்த தகவல்களின்பிரகாரம் அனைத்து புதைகுழிகள் தொடர்பிலும் சர்வதேச கண்காணிப்புடனான அகழ்வுக்கு இலங்கை அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் என வலியுறுத்த வேண்டும், இலங்கையில் பொறுப்புக்கூறல் விவகாரம் தொடர்பில் ஐ. நா. பொதுச் சபை ஊடாக ஐ. நா. பாதுகாப்பு அவைக்கு விடயம் பாரப்படுத்தப்பட்டு அதனூடாக சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணை ஒன்றை சாத்தியப்படுத்துவதற்கான செயற்பாடுகளை ஐ நா மனித உரிமை ஆணையாளர் எதிர்வரும் ஐ. நா மனித உரிமை பேரவை கூட்டத்தில் முடுக்கி விட வேண்டும் - ஆகிய 6 கோரிக்கைகளே தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டன. (ஐ-03)

# ஆயக்கடவை சித்திவிநாயகர் தேர்த் திருவிழா சிறப்புற நடந்தது




யாழ்ப்பாணம், ஜூலை 11

புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை சித்திவிநாயகர் ஆலயத்தின் தேர்த் திருவிழா நேற்று முன்தினம் புதன்கிழமை வெகுசிறப்பாக நடைபெற்றது.

தேர்த் திருவிழா காலை 06 மணியளவில் விசேட அபிஷேக ஆராதனைகள் ஆரம்பமானது. வசந்தமண்டப பூசையைத் தொடர்ந்து விநாயக பெருமான் உள்வீதியில் திருநடனத்து டன் எழுந்தருளி உலா வந்து சித்திரத் தேரில் ஆரோகணித்தார்.

சிதறு தேங்காய்கள் உடைக்கப்பட்டு, விசேட தீபாராதனை வழிபாடுகளைத் தொடர்ந்து அடியவர்களின் அரோகரா கோஷம் முழங்க, ஆண், பெண் அடியவர்கள் வடம் தொட்டிழுக்க முற்பகல் 10.30 மணியளவில் சித்திரத் தேர்ப் பவனி ஆரம்பமானது.

இந்தத் திருவிழாவில் பல நூற்றுக்கணக்கான அடியவர்கள் பங்கேற்றிருந்தனர். (ஐ)

# கும்பாபிஷேகத்தில் கைவரிசை; 4 பெண்களுக்கு விளக்கமறியல்!

யாழ்ப்பாணம், ஜூலை 11

ஆலய கும்பாபிஷேகத்தில் தங்க நகைகளை களவாடிய குற்றச்சாட்டில் கைதான 4 பெண்களை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

திருநெல்வேலி பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில் கடந்த திங்கட்கிழமை மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதில், ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டிருந்தனர். அந்த சமயம் தாலிக்கொடி ஒன்று உள்ளிட்ட ஐவரின் தங்க நகைகள் களவாடப்பட்டன.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸார் சந்தேகத்துக்கு இடமான முறையில் அந்த சூழலில் நடமாடிய 4 பெண்களை கைது செய்தனர். அவர்கள் நால்வரும் வடமேல் மாகாணத்தை சேர்ந்தவர்கள் என்று விசாரணைகளில் தெரிய வந்தது.

இதைத் தொடர்ந்து கைதானவர்கள் கடந்த செவ்வாய்க் கிழமை யாழ் . நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர். இதன் போது அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)

# ஆளுநரிடம் கோரிக்கை மனு; நல்லூர் தவிசாளர் அளித்தார்

யாழ்ப்பாணம், ஜூலை 11

வடக்கு மாகாண ஆளுநரை நேரில் சந்தித்து, நல்லூர் பிரதேச சபையின் தேவைப்பாடுகள் தொடர்பிலான கோரிக்கை மனுவை தவிசாளர் தலைமையிலான குழுவினர் கையளித்துள்ளனர்.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனை, நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப. மயூரன் தலைமையிலான உறுப்பினர்கள் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போதே நல்லூர் பிரதேச சபையின் தேவைப்பாடுகள் தொடர்பிலான கோரிக்கைகள் அடங்கிய மனுவை கையளித்தனர். (ஐ)

# வடக்கில் வீதி விபத்துகளை தடுப்பதற்கு விசேட திட்டம்!

யாழ்ப்பாணம், ஜூலை 11

“பாதுகாப்பான வீதி, பாதுகாப்பான சுகாதாரம்“ என்ற தொனிப்பொருளில் வீதி விபத்துகளை தடுப்பதற்கான திட்டத்தை நடைமுறைப்படுத்தலாம் என குழந்தை மருத்துவ நிபுணர் பி. சயந்தன் யோசனை முன் வைத்துள்ளார்.

விபத்துகளை தடுப்பது தொடர்பான பொறிமுறையை உருவாக்கும் நோக்கிலான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது, குழந்தை மருத்துவ நிபுணர், விபத்துத் தணிப்பு தொடர்பான விடயத்தை தன்னார்வமாக முன்னெடுத்து வரும் தனது திட்டம் தொடர்பில் தெளிவுபடுத்தும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

குறித்த கலந்துடையாடலில், வடக்கு மாகாணத்தில் விபத்துக்கள் அதிகரித்துச் செல்லும் நிலையில் அதனை கட்டுப்படுத்துவதற்கான பொறுப்பு அனைவருக்கும் உள்ளதாக ஆளுநர் முன்னுரையில் குறிப்பிட்டார்.

இதன் பின்னர், யாழ். பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் யாழ்ப்பாண பிராந்தியத்தில் இடம்பெற்ற விபத்துகள், அறவிடப்பட்ட தண்டப்பணம் தொடர்பான விவரங்களை முன்வைத்ததுடன், விபத்துகளுக்கான காரணிகள், வீதிகளில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் தெரியப்படுத்தினார்.

மேலும், வீதிப் போக்குவரத்துக்கு இடையூறாக வீதிகளில் காணப்படும் அனைத்தையும் அகற்றுவதற்கு உள்ளூராட்சி மன்றங்கள் ஒத்துழைக்குமாக இருந்தால் அதனைச் செயல்படுத்த தயார் எனவும் குறிப்பிட்டார்.

அதற்கான ஒத்துழைப்புகளை வழங்குமாறு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

அத்துடன், முதல்கட்டமாக பாடசாலை மாணவர்கள் மற்றும் சாரதிகளுக்கான விழிப்புணர்வு செயல்பாட்டை ஆரம்பிப்பது என்றும் குறிப்பிட்ட கால இடைவெளியில் மீண்டும் முன்னேற்ற மீளாய்வு கலந்துரையாடல் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் மூத்த உதவிச் செயலாளர், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாண பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். மாவட்ட பொறியியலாளர், வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் மற்றும் பொதுமுகாமையாளர், முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தினர் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
11.07.2025 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், ஆனி 27

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## இந்தியாவின் உதவி

மீண்டும் இந்தியா இலங்கைக்கு 100 கோடி அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளது. இலங்கை வரலாற்று ரீதியான திவாலை எதிர்கொண்டபோது உலகில் உதவி செய்த ஒரேயொரு நாடும் இந்தியாதான். 400 கோடி அமெரிக்க டொலர்களை வழங்கியது. அது சாதாரணமான உதவியல்ல. இந்தியா அதனை செய்யாது விட்டிருந்தால் இலங்கை நெருக்கடியிலிருந்து மீளமுடியாத அதேவேளை மக்கள் வன்முறையில் ஈடுபடும் கொந்தளிப்பான நிலைமையையும் ஏற்படுத்தியிருக்கும். அப்போது, ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்கிரமசிங்க இந்திய உதவியை "இலங்கைக்கான மூச்சுக் காற்று" என்று சரியாகவே வர்ணித்திருந்தார். தற்போது அமெரிக்க வரி விதிப்பால் புதிய நெருக்கடியை சந்தித்திருக்கும் இலங்கைக்கு இந்தியா மீளவும் 100 கோடி உதவியை அறிவித்திருக்கிறது.

ஆனால், இந்தியாவிடமிருந்து உதவிகளைப் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டிய ஈழத்தமிழ் அரசியல்வாதிகளோ மௌனிகளாக இருக்கின்றனர். எந்த அடிப்படையில் இந்தியாவை அணுகலாம் என்பதைக் கருத்தில்கொண்டு செயல்படாமல், பதினாறு வருடங்களாக ஒரு சிறு முன்னேற்றத்தையும் காண்பிக்காத பொறுப்புக்கூறல் கதைகளை சொல்லிக் கொண்டிருப்பதையே அரசியல் பணியென்று எண்ணிக் கொண்டு நாட்களை நகர்த்திக் கொண்டிருக்கின்றனர்.

ஈழத் தமிழர் விவகாரத்தில் இந்தியாவின் கொள்கை நிலைப்பாடு மாகாண சபை என்பதை மீண்டும் ஒரு முறை சொல்ல வேண்டியதில்லை. அதனை இந்தியா பல்வேறு சந்தர்ப்பங்களில் வலியுறுத்தியிருக்கிறது. பதின்மூன்றுக்கு அப்பால் செல்லும் கோரிக்கைகளை - "பாலத்துக்குக் கீழ் நீண்டகாலமாகத் தண்ணீர் ஓடிவிட்டது" என்பதாகவே புதுடில்லி சுட்டிக்காட்டியிருக்கிறது.

இலங்கை விடயத்தில் நீண்ட மற்றும் பிரத்தியேக அனுபவங்களைக் கொண்டிருக்கும் வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் இதனை அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் ஒரு மேசையில் அமர்த்தி வலியுறுத்தியிருந்தார். சமஷ்டியை நோக்கி உங்களால் முடிந்தால் செல்லுங்கள். அதில், இந்தியாவுக்கு எந்தவோர் ஆட்சேபனையும் இல்லை என்பதையும் அவர் மறைமுகமாகச் சுட்டிக் காட்டியிருந்தார். இன்றுள்ள நிலையில் எதை நோக்கிச் செல்வதாயினும்கூட இலங்கைக்குள்தான் விடயங்களைக் கையாள வேண்டும். வெளியிலிருந்து எந்தவோர் அதிசயங்களும் நிகழப்போவதில்லை. இலங்கைக்குள் எதனைக் கையாளலாம்?

இன்றுள்ள நிலையில் மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதற்கான அழுத்தங்களை பிரயோகிப்பதும் குறிப்பாக, அதனை ஒரு ஜனநாயகக் கோரிக்கையாக முன்வைப்பதும் அவசியம். ஏனெனில், "மயிலே மயிலே என்றால் அது இறகு போடப் போவதில்லை" - தமிழ் கட்சிகளும் ஒன்றுபட்டு முயற்சிக்க வேண்டும். தொடர்ச்சியாக இந்த விடயத்தைப் பேசு பொருளாக்க வேண்டும்.

தமிழ் கட்சிகள் இதனை ஓர் அரசியல் விவகாரமாக மாற்றாத வரையில் அரசாங்கம் மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதைத் தள்ளிப்போடவே முயற்சிக்கும். மாகாண சபைகள் தேர்தலுக்கான கோரிக்கைகள் ஓர் அரசியல் இயக்கமாக மாறினால்தான் இந்த விடயத்தில் புதுடில்லியின் கடைக்கண் பார்வையைத் திருப்ப முடியும். இந்த விடயத்தில் தமிழ் கட்சிகளும் தமிழ் சிவில் சமூகமும் கரிசனை கொள்ளாது - அதற்காக ஒன்றுபட்டு உழைக்காது போனால் புதுடில்லி தானாக இந்த விடயத்தில் அக்கறை கொள்வதற்கு சாத்தியமில்லை. மாகாண சபைகள் தேர்தல் நடந்தால்தான் அதன் பின்னர், வடக்கு - கிழக்கை அடிப்படையாகக் கொண்டு இந்திய ஆதரவுடன் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க முடியும்.

# ஓட்டிசம் பாதித்த குழந்தைகளுக்கு பராமரிப்பு நிலையங்கள் திட்டம்!

கொழும்பு, ஜூலை 11

ஓட்டிசம் மற்றும் நரம்பியல் வளர்ச்சி பிரச்னைகள் உள்ள குழந்தைகளுக்காக பராமரிப்பு நிலையங்களை நிறுவுவதற்கு தேசிய அளவிலான பொறிமுறையை தயாரிப்பதற்கான கூட்டுத் திட்டத்துக்கான எண்ணக்கரு ரீதியான முன்மொழிவை இரு வாரங்களுக்குள் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் எண்ணக்கருவின் அடிப்படையில் செயல்படுத்தப்படும் இந்த திட்டம் குறித்து சமூக சக்தி செயலகத்தின் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதியின் செயலாளர் இது தொடர்பாக தொடர்புடைய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இந்தத் திட்டம் சம்பந்தப்பட்ட துறைசார் அமைச்சுகள் மற்றும் நிறுவனங்களால் செயல்படுத்தப்படுவதோடு ஒருங்கிணைப்பு பணிகளை ஜனாதிபதி பணிமனை மேற்கொள்ளும்.

இந்த ஆண்டு வரவு - செலவு திட்டத்தில் மகளிர் மற்றும் சிறுவர்கள் விவகார அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட 25 கோடி ரூபாய் நிதியை சமூக சேவைகள் திணைக்களத்தால் மாவட்ட செயலாளர்களுக்கு வழங்குதல், பராமரிப்பு நிலையங்களை செயல்படுத்த தேவையான மனிதவள அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிப்பது, இந்தத் திட்டத்துடன் தொடர்புடைய துறைசார் நிறுவனங்களை இணைத்து அறிவியல் பின்னணியுடன் கூடிய புதிய மாதிரியொன்றைத் தயாரிப்பது குறித்து ஆராயப்பட்டது.

இந்த விடயங்களை உள்ளடக்கிய ஒரு பொறிமுறையை தயாரிப்பதற்கான எண்ணக்கரு ரீதியான முன்மொழிவை இரு வாரங்களுக்குள் தயாரிக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க அதிகாரிகளுக்கு மேலும் அறிவுறுத்தியுள்ளார். (ஐ)

# 48,300 சுற்றுலாவிகள் 8 நாட்களில் வருகை


கொழும்பு, ஜூலை 11

இந்த வருடத்தின் ஜூலை மாதத்தின் முதல் 8 நாட்களில் மாத்திரம் 48 ஆயிரத்து 300இற்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதற்கமைய, 2025 ஆம் ஆண்டுடன் இதுவரையான காலப்பகுதியில் நாட்டுக்கு வருகை தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 12 இலட்சத்து 16 ஆயிரத்து 344 ஆகும்.

2024ஆம் ஆண்டில் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை ஒக்டோபர் மாதத்திலேயே 12 இலட்சத்தை தாண்டியுள்ளது. (ஐ)

# கீரிமலையில் வெடிபொருள் மீட்பு



யாழ்ப்பாணம், ஜூலை 11

கீரிமலையில் காணி ஒன்றிலிருந்து வெடிபொருள் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

கீரிமலை - புதிய கொலனி பகுதியிலேயே நேற்று முன்தினம் புதன்கிழமை இந்த வெடிபொருள் மீட்கப்பட்டது.

இது தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து விசேட அதிரடிப் படையினர் அந்த வெடிபொருளை பாதுகாப்பாக மீட்டனர். (ஐ-5)

# பேராசிரியர் தில்லைநாதனுக்கு இன்று யாழில் அஞ்சலி நிகழ்வு!


யாழ்ப்பாணம், ஜூலை 11

கடந்த மாதம் காலமாகிய பேராதனை பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் முன்னாள் தலைவர் தகைசால் தமிழ்ப் பேராசிரியர் சி. தில்லைநாதனுக்கான அஞ்சலி நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணம் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் (ராஜா கிறீம் ஹவுஸ்) நடைபெறவுள்ளது.

கல்வியியல் கல்லூரியின் ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாநிதி ந. இரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அஞ்சலி உரைகளை யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் நா. சண்முகலிங்கன், பேராதனை பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் வ. மகேஸ்வரன், தேசிய கலை இலக்கிய பேரவையின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி சோ.தேவராஜா, யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் கி. விசாகரூபன், யாழ். அருணோதய கல்லூரி ஆசிரியர் சி. ரமேஷ் ஆகியோர் ஆற்றுவர்.

மேலும் பேராசிரியர் எம்.ஏ. நுஃமான், பேராசிரியர் சி. சிவசேகரம் ஆகியோரின் அஞ்சலிக் குறிப்புகளும் வாசிக்கப்படவுள்ளன. நிகழ்ச்சித் தொகுப்பை ஆசிரியர் த. சிறீபிரகாஸ் வழங்குவார். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். எதிர்பார்த்தி ருந்த தொகைகைக்கு வரும். உழைப்பிற்கு அங்கீ காரம் கிடைக்கும். புது அத்தியாயம் தொடங்கும்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாம லேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும். பொறுமை தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
மனைவி வழியில் அனுகூலம் உண்டு. புதிய நட் பால் உற்சாகமடைவீர்கள். வாகனத்தை சீர் செய் வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உத வுவீர்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும்.

**கடகம்**
விஐபிகள் அறிமுகமாவார்கள். அரசால் அனுகூ லம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். பணப் புழக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயரதி காரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள்.

**சிம்மம்**
நட்பு வட்டம் விரியும். நீண்டநாள் பிரார்த்த னையை நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தில் உங் கள் கை ஓங்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். புதுமை படைக்கும் நாள்.

**கன்னி**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாய மும் உண்டு. எதிர்ப்புகள் அடங்கும். வியாபாரத தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். உத்தியோ கத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும்.

**துலாம்**
குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**விருச்சிகம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பழைய பிரச்னைகள் தீரும். பிள்ளைகளின் பிடிவா தம் தளரும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில விமர்சனங்க ளுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். உத் தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல் லது. நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும்.

**மகரம்**
விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையா ளுங்கள். கணவன் - மனைவிக்குள் கருத்து வேறு பாடுகள் வந்து நீங்கும். மேலதிகாரிகளால் விவா தம் வரக்கூடும். அதிகம் உழைக்க வேண்டும்.

**கும்பம்**
பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோ கத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**மீனம்**
உறவினர்கள், நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத் தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும்.

# வட்டியில்லா கடன் திட்டம் தொடர்பில் யாழில் மாணவர்களுக்கு விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 11

அரசு சாரா உயர் கல்வி நிறு வனங்களில் மாணவர்கள் கற்ப தற்கான வட்டியில்லா கடன் திட்டம் தொடர்பான விழிப்பு ணர்வை ஏற்படுத்துமாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மரு தலிங்கம் பிரதீபன் கோரிக்கை விடுத்துள்ளார்.

திறன் அபிவிருத்தி உத்தியோ கத்தர்களுடனான கலந்துரையா டல் அரசாங்க அதிபர் அலுவல கத்தில் நேற்று முன்தினம் நடை பெற்றது.

இதன்போது தலைமையுரை யாற்றிய அரசாங்க அரசாங்க கூறுகையில், "கல்வி அமைச் சின் கீழ் இயங்கும் மாணவர் கடன் பிரிவானது இலங்கை யில் க.பொ.த. உயர்தரத்தில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு அரசாங்கத்தால் அரசு சாரா அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங் களில் பட்டப் படிப்பை தொடர வட்டி இல்லா கடன் திட்டத்தை செயல்படுத்துகின்றது. 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டு களில் நடைபெற்ற உயர்தர பரீட்சையில் தோன்றி பல்கலைக் கழக அனுமதிக்குத் தகுதி பெற் றவர்கள் இந்தத் திட்டத்துக்கு தகுதியானவர்கள் ஆவார். மேலும், எமது மாணவர்கள் பயன்பெ றும் வகையில் திறன் அபிவி ருத்தி உத்தியோகத்தர்கள் தங் கள் பிரிவில் இந்தத் திட்டத் துக்கு தகுதியான மாணவர்களை இனம் கண்டு மாணவர்களுக் கும் அவர்களது பெற்றோர்களுக் கும் குறித்த திட்டம் தொடர் பான விழிப்புணர்வை வழங்கும் வகையில் எதிர்வரும் 18 ஆம் திகதி மாவட்ட செயலகத்தில் கொழும்பிலிருந்து வருகை தரும் அமைச்சின் அதிகாரிகளால் தெளிவூட்டல்கள் வழங்கப்பட வுள்ளதால், இந்தத் தெளிவூட் டல் நிகழ்வுக்கு மாணவர்களை யும் பெற்றோர்களையும் அழைத்து வருமாறு திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை அரசாங்க அதிபர் கேட்டுக்கொண்டார்.

இந்தத் திட்டத்துக்கான விண்ணப்பங்களை www. studentloan.mohe.gov.lk என்ற இணையத்தளம் மூலம் சமர்ப்பிக்க முடியும் என்பது டன் ஏனைய விவரங்களையும் அறிந்து கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பொருட்கள், சேவைகள் தொடர்பில் விலைகள் ஆராயப்பட்டு நிர்ணயம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

2025 ஆம் ஆண்டுக்கான மாவட்ட விலை நிர்ணயக் குழுக் கூட்டத்தின் இரண்டாவது காலாண்டுக்கான கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்ட அர சாங்க அதிபர் ம. பிரதீபன் தலை மையில் நேற்று முன்தினம் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில், பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான விலை கள் ஆராயப்பட்டு நிர்ணயிக் கப்பட்டது.



பிரதம கணக்காளர், பிரதம பொறியியலாளர், திட்டமிடல் பணிப்பாளர், உள்ளகக் கணக் காய்வாளர், உதவி மாவட்டச் செயலாளர், பிரதேச செயலா ளர்கள், உதவி பிரதேச செயலா ளர்கள், திணைக்களங்களின் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத் தர்கள், தொடர்புடைய சேவை அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர். (எ)

# வீதிப் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு இளவாலையில் விழிப்புணர்வு நடைபவனி

யாழ்ப்பாணம், ஜூலை 11

வீதிப் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் விழிப்புணர்வு நடைபவனி முன் னெடுக்கப்பட்டது.

இளவாலை பிரதேச மருத்து வமனையிலிருந்து மெய்கண் டான் பாடசாலை வரை இந்த நடைபவனி நேற்று முன்தினம் காலை நடைபெற்றது.

"வீதி விபத்தை தடுப்போம்" எனும் தொனிப்பொருளில் "விதிகளை மதிப்பது உயிரைக் காப்பது, மதிபடாத சிக்னல் மரணத்தின் அழைப்பிதழ், ஒரு நிமிடம் பொறுமை ஒரு வாழ் நாள் பாதுகாப்பு" ஆகிய வாசக ங்கள் மற்றும் வீதிப் பாதுகாப்பு சார்ந்த பதாகைகளை தாங்கிய வாறு நடைபவனியில் ஈடுபட் டனர்.

இந்த நடைபவனியில் பாட சாலை மாணவர்கள், ஆசிரியர் கள், பொதுச் சுகாதார பரிசோ தகர்கள், சுகாதார உத்தியோகத் தர்கள், பொது மக்கள் எனப் பல ரும் கலந்து கொண்டனர்.(எ-05)

# கடல் உணவுப்பொருட்கள் வெட்டுவதற்கு நல்லூர் பிரதேச சபை கட்டணம் நிர்ணயம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

நல்லூர் பிரதேச சபைக்குட் பட்ட கொக்குவில் பொதுச் சந் தையில் கடல் உணவுப்பொருட் கள் வெட்டுவதற்கு மற்றும் இறால் சுத்தம் செய்வதற்குமான கட்டணங்கள் பின்வருமாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ கிராம் மீன் வெட் டுவதற்கு 50 ரூபாய், ஒரு கிலோ கிராம் நண்டு உடைப்பதற்கு 50 ரூபாய், ஒரு கிலோ கணவாய் வெட்டுவதற்கு 100 ரூபாய்,

ஒரு கிலோ கிராம் சுறா மீன் வெட்டுவதற்கு 100 ரூபாய், ஒரு கிலோ கிராம் திருக்கை வெட்டு வதற்கு 50 ரூபாய்,

ஒரு கிலோ கிராம் பெரிய இறால் சுத்தப்படுத்துவதற்கு 100 ரூபாய்,

ஒரு கிலோ கிராம் சிறிய இறால் சுத்தப்படுத்துவதற்கு 120 ரூபாய் என நிர்ணயிக்கப் பட்ட கட்டணத்துக்கு மேலதிக மாக கட்டணம் எதுவும் அறவிட முடியாது. அவ்வாறு அறவிடப் படின் 021 2222700 அல்லது 021 2212178 என்ற இலக்கங்களூ டாக பொதுமக்கள் முறைப்பாடு களை தெரிவிக்கலாம். விசார ணைகள் மூலம் மேலதிக கட்ட ணம் அறவிடப்பட்டமை உறு திப்படுத்தப்பட்டால் உரியவர் களுக்கு எதிராக சபையால் நட வடிக்கை மேற்கொள்ளப்படும்.

அத்துடன் கொக்குவில் பொதுச் சந்தையில் கடலுணவு வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் கடலுணவுப் பொருட்களை வெட்டுதல், சுத்தப்படுத்திலில் ஈடுபட முடியாது என நல்லூர் பிரதேச சபை தவிசாளர் மயூரன் அறிவித்துள்ளார். (எ- 05)

# 13 வயது சிறுமி துஷ்பிரயோகம் 19 வயது இளைஞன் கைதானார்

யாழ்ப்பாணம், ஜூலை 11

யாழ்ப்பாணம் - வட்டுக் கோட்டை பொலிஸ் பிரிவுக்குட் பட்ட சுழிபுரம் பகுதியில் 13 வயதுச் சிறுமியை தவறான நடத்தைக்கு உட்படுத்திய இளை ஞன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சிறுமியின் உறவின ரான 19 வயது இளைஞன், சிறு மியை தவறான நடத்தைக்கு உட் படுத்திய விடயம் குறித்து வட் டுக்கோட்டை பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு பதிவு செய் யப்பட்டது.

இதனடிப்படையில் விசார ணைகளை மேற்கொண்ட வட் டுக்கோட்டை பொலிஸார் குறித்த இளைஞனை கைது செய்தனர். விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதி மன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சத்தால் புதைகுழிகளை புறக்கணிக்கின்றது அரசு!

## ரவூப் ஹக்கீம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 11

**தேசப்பற்றாளர்களின் அதிகாரத்துக்கு அச்சப்பட்டே அரசாங்கம் மனிதப் புதைகுழிகள் விடயத்தில் கவனம் செலுத்தாது இருக்கின்றது என்று குற்றஞ்சாட்டிய முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், செம்மணி மனிதப் புதைகுழியுள்ள இடத்துக்கு இதுவரை அரசாங்கமோ காணாமல் போனோர் அலுவலகமோ செல்லவில்லை என்றும் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் புதன்கிழமை இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குற்றஞ்சாட்டினார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்-நாம் அனைவரும் கவலையடையும் விடயமொன்று தற்போது இடம்பெறுகின்றது. அதாவது செம்மணியில் மனிதப் புதைகுழிகள் அகழப்படுகின்றன. தினமும் அங்கு எலும்புக்கூடுகள் மீட்கப்படுகின்றன. சிறுவர்கள், குழந்தைகள் தமது விளையாட்டுப் பொருட்களுடன் புதைக்கப்பட்ட கொடூரமான சம்பவம் தொடர்பில் தினமும் பத்திரிகைகளில் தலைப்புச் செய்திகள் வெளியிடப்படுகின்றன. குறிப்பாக தமிழ் பத்திரிகைகளில் அந்தச் செய்திகளை பார்க்கலாம். ஆனால் தெற்கில் மற்றைய பத்திரிகைகளில் இது தொடர்பில் முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை. எங்கேயாவது ஒரு மூலையில் சிறிதாக குறிப்பிடப்படுகின்றன.

யூரியூப் சனல் ஒன்றை நடத்தும் தரிந்து ஜயவர்தன என்பவர் அவ்விடத்துக்குச் சென்று பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளுக்குச் சென்று ஆராய்கின்றார். ஆனால் அரச தரப்பில் எவரும் இதுவரையில் அந்தப் பகுதியில் கால் வைக்கவில்லை என்று அங்கு அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ள குழுவினர் கூறுகின்றனர். இந்த விடயத்தில் அரசாங்கத்தின் பொறுப்பு என்ன, காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தினர் அங்கு சென்றனரா? காணாமல் போனோர் தொடர்பான சட்டத்தின்படி உங்களுக்கு அதிகாரங்கள் உள்ளன.

இதேவேளை, அநீதிக்கு எதிரான ஜே.வி.பியின் இளைஞர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர். அது தொடர்பான ஆணைக்குழு அறிக்கைகள் பல உள்ளன. பல்வேறு மனிதப் புதைகுழிகள் மற்றும் துன்புறுத்தல் நிலையங்கள் தொடர்பில் தகவல்கள் உள்ளன. இது தொடர்பில் என்ன செய்கின்றீர்கள். உங்களுடையவர்களின் மனிதப் புதைகுழிகளைகூட இன்னும் அகழ்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் எதற்காக அமைக்கப்பட்டுள்ளது. சர்வதேசத்துக்கு முன்னால் எமது நாட்டின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படும்போது, பெயருக்கு கைகட்டிகொண்டு பார்த்துக்கொண்டிருக்கவா காணாமல்போனோர் தொடர்பான அலுவலகம் இருக்கின்றது? அதிகாரங்களை பயன்படுத்த முடியும். அதனை செய்யாமல் இருப்பது ஏன்? உங்களின் தேசப்பற்றாளர்களுக்கு நீங்கள் பயத்துடன் இருக்கின்றீர்கள்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரியை தேடுகின்றீர்கள் என்றால், ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் அபுஹின் தொடர்பில் கூறப்பட்டுள்ளது. அவருடன் தொடர்புடைய இன்னுமொரு அபு இருந்தார். பக்தம்அபு என்பவரே அவர். அவர் இஸ்ரேலைச் சேர்ந்தவர். அவர் ஆலோசனைகளை வழங்கியுள்ளார். சஹ்ரானின் மனைவியிடமும் முறையாக விசாரித்தால் இந்த விடயங்கள் தொடர்பில் அறிந்துகொள்ளலாம். இவரிடம் சாட்சியங்களை பதிவு செய்ய ஆணைக்குழு கேட்டபோது, சட்டமா அதிபர் திணைக்களம் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தது. இறுதியில் அவரிடம் விசாரணை நடத்தியதுடன், பல்வேறு விடயங்களை பதிவு செய்துள்ளனர்.

# நான்கு மீன்பிடி துறைமுகங்களின் அபிவிருத்திக்கு பிரான்ஸ் ஆதரவு



கொழும்பு, ஜூலை 11

நான்கு முக்கிய மீன்பிடித் துறைமுகங்களின் அபிவிருத்திக்கு பிரான்ஸ் ஆதரவு வழங்கவுள்ளதாக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகருக்கும், இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ரெமி லம்பேர்ட்டுக்கும் இடையிலான சந்திப்பில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பு கடற்றொழில் அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் இலங்கையின் மீன்பிடித் துறையை மேம்படுத்துவதற்கான பல்வேறு முன்முயற்சிகள் மற்றும் ஏற்கனவே உள்ள ஒத்துழைப்புகளை வலுப்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் முக்கிய அம்சமாக, கடற்றொழில் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட இலங்கை பிரதிநிதிகள் குழுவினரின் அண்மைய பிரான்ஸ் உத்தியோகபூர்வ விஜயம் அமைந்தது.

இவ்விஜயத்தின் போது, துறைமுக மேம்பாடு தொடர்பாக பிரான்ஸ் அரசாங்கத்திற்குச் சொந்தமான பொது நிதி நிறுவனமான பிரான்ஸ் அபிவிருத்தி முகவரமைப்புடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன.

குறிப்பாக, காலி, பேருவளை, புராணவெல்ல மற்றும் குடாவெல்ல ஆகிய நான்கு முக்கிய மீன்பிடி துறைமுகங்களின் மேம்பாட்டுக்கான பிரான்ஸ் அபிவிருத்தி முகவரமைப்புடன் சாத்தியமான ஆதரவு குறித்து ஆராயப்பட்டது.

இது தொடர்பாக அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகருடன் பிரான்ஸ் தூதுவர் லம்பேர்ட் விரிவாகக் கலந்துரையாடினார்.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் ஒப்புதலுடன் இத்திட்டத்தை துரிதப்படுத்த முடியும் என்றும் அவர் உறுதிப்படுத்தினார்.

கடந்த 76 ஆண்டுகளாக முன்னைய ஆட்சியாளர்களால் நாட்டுக்கு ஏற்பட்ட பாரிய வீழ்ச்சிக்குப் பின்னர், தற்சமயம் நாட்டை ஸ்திரத்தன்மைக்குக் கொண்டு வந்து வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்வதற்கு அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிகள் குறித்து அமைச்சர் சந்திரசேகர் பிரான்ஸ் தூதுவருக்கு விளக்கினார்.

2022 இல் வங்குரோத்து நிலையை அடைந்த நாடு தற்போது படிப்படியாக முன்னேறி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பதிலுக்கு, பிரான்ஸ் தூதுவர், இலங்கையின் கடன் மறுசீரமைப்பு முயற்சிகளுக்கு பிரான்ஸ் முழு ஆதரவை வழங்கியதை வலியுறுத்தினார்.

கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளில் எட்டப்பட்ட ஒப்பந்தத்தை அவர் நினைவுபடுத்தியதுடன், இந்த மறுசீரமைப்பு முன்முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய முதல் நாடுகளில் பிரான்ஸ் ஒன்றாகும் என்றும் சுட்டிக்காட்டினார். (அ)

# குற்றப்பத்திர அலுவலகம் விரைவில் அமைக்கப்படும்

கொழும்பு, ஜூலை 11

குற்றப்பத்திர அலுவலகம் வெகுவிரைவில் ஸ்தாபிக்கப்படும். சட்டமா அதிபர் திணைக்களத்துடன் எவ்வித முரண்பாடுகளும் எமக்கு கிடையாது. சட்டமா அதிபருடன் இணக்கமாகவே செயற்படுகிறோம். பிள்ளையானுக்கு பிணை பெற்றுக்கொடுக்க சட்டமா அதிபர் முயற்சிக்கவில்லை என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் ஆட்சியில் தான் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்பதை போன்று எதிர்க்கட்சியினர் பேசுகிறார்கள். குண்டுத தாக்குதல்கள் நடத்தப்பட்ட போது அமைச்சரவை அமைச்சர்களாக இருந்தவர்கள் பலர் இன்று எதிர்க்கட்சியில் உள்ளார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் இன்று பல யோசனைகளை முன்வைக்கிறார். அன்று இந்த யோசனைகளை முன்வைத்திருந்தால் உண்மையை கண்டுபிடித்திருக்கலாம். இருப்பினும் முன்வைத்த இந்த யோசனைகள் தொடர்பில் நாங்கள் விசேட கவனம் செலுத்துவோம்.

குற்றப்பத்திர அலுவலகம் ஒன்றை ஸ்தாபிப்பதற்காக அமைச்சரவை உபகுழு ஒன்று நியமிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இதனை குறிப்பிட்டுள்ளோம். சட்டமா அதிபரின் ஆலோசனையுடன் தான் நாங்கள் செயற்படுகிறோம். வெகுவிரைவில் குற்றப்பத்திர காரியாலயம் ஸ்தாபிக்கப்படும்.

சட்டமா அதிபர் திணைக்களத்துடன் முரண்பாட்டினால் குற்றப்பத்திர அலுவலகத்தை ஸ்தாபிக்க தீர்மானிக்கவில்லை. சட்டமா அதிபர் திணைக்களத்துடன் நாங்கள் இணக்கமாகவே செயற்படுகிறோம். ஒரு சில ஊடகங்கள் சட்டமா அதிபரை பலவீனப்படுத்தும் வகையில் செயற்படுகின்றன. பிள்ளையானுக்கு பிணை பெற்றுக் கொடுக்க சட்டமா அதிபர் முயற்சிக்கவில்லை-என்றார்.

# இலஞ்சம் கோரிய பொலிஸ் அதிகாரி கைது!

கொழும்பு, ஜூலை 11

இலஞ்சம் பெற்ற சம்பவம் தொடர்பாக பொலிஸ் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

போதைப்பொருள் வழக்கு தொடர்பான சட்டத்தை அமுல்ப்படுத்தாமல் இருக்க கைது செய்யப்பட்ட பொலிஸ் அதிகாரியும் மற்றொரு அதிகாரியும் சந்தேக நபர்களிடமிருந்து 200,000 ரூபாய் இலஞ்சம் கோரியிருந்தனர்.

குறித்த பொலிஸ் அதிகாரிகள் ஆரம்பத்தில் 20,000 ரூபாவை பெற்றிருந்த நிலையில், மீதமுள்ள 180,000 ரூபாய் பணத்தை பெற்றுக் கொள்ள சென்ற போது இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகள் இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது ஒரு பொலிஸ் அதிகாரி கைது செய்யப்பட்ட நிலையில், மற்றைய பொலிஸ் அதிகாரி சம்பவ இடத்திலிருந்து தப்பி ஓடிவிட்டதாகக் கூறப்படுகிறது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரான பொலிஸ் அதிகாரி முதற்கட்ட விசாரணைகளுக்குப் பிறகு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளார். (அ)

# அமைச்சர் சாவித்திரி போல்ராஜிடம் 3 கோரிக்கைகளை முன்வைத்த ரவிகரன்

கொழும்பு, ஜூலை 11

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சம்பள உயர்வு உள்ளிட்ட முக்கிய மூன்று விடயங்கள் தொடர்பில் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜிடம் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கோரிக்கைகளை முன்வைத்துள்ளார்.

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக்குழுவின் மூன்றாவது கூட்டம் நேற்று முன் தினம் புதன்கிழமை பாராளுமன்றக் கட்டடத்தொகுதியில் இடம்பெற்றது.

குறித்த அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அமைச்சரிடம் இவ்வாறு கோரிக்கைகளை முன்வைத்துள்ளார்.

குறிப்பாக முன்பள்ளி ஆசிரியர்களின் சம்பளத்தை அதிகரித்தல், வன்னி பிராந்தியத்தில் காணப்படும் அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் தமிழ்பேசும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரையாவது நியமித்தல், வன்னியிலுள்ள பிரதேசசெயலகங்களில் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்திக்குழுக்களைச் செயற்படுத்துதல் உள்ளிட்ட கோரிக்கைகளே பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனால், அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜிடம் முன்வைக்கப்பட்டிருந்தன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசாத் மௌலானாவை நாட்டுக்கு அழைத்து வர அரசு நடவடிக்கை!

## அமைச்சர் ஆனந்த விஜேபால அறிவிப்பு



கொழும்பு, ஜூலை 11

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் தகவல்கள் அறிந்த அசாத் மௌலானாவை நாட்டுக்கு கொண்டு வருவதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுவருகின்றது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற விவாதத்தில் இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பான மீள் விசாரணைகள் சிறப்பாக இடம்பெற்றுவருகின்றன. இச்சம்பவம் தொடர்பில் தகவல் தெரிந்த சாட்சியாளரான அசாம் மௌலானா அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அவர் வழங்கி தகவல்களின் அடிப்படையில் பல குழுக்கள் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றன. அசாத் மௌலானாவை நாட்டுக்கு கொண்டுவருவதற் குரிய நடவடிக்கை சட்டப்பூர் வமாகவும், இராஜதந்திர மட்டத்திலும் முன்னெடுக்கப்பட் டுவருகின்றது-என்றார்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சர்வதேச விசாரணை தேவை!

## காவிந்த ஜயவர்த்தன வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 11

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் சுயாதீன சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணைமீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன இவ்வாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஆசாத் மௌலானா என்ற நபரை பிரான்ஸில் இருந்து நாட்டுக்கு அழைத்துவந்து விசாரிக்க முடியாதா? அல்லது இங்கிருந்து அதிகாரிகள் குழுவொன்றை விசாரணைக்கு அனுப்ப முடியாதா? இதற்குரிய நடவடிக்கை ஏன் இடம்பெறவில்லை? எதற்காக தாமதம்? யாரை பாதுகாக்க அரசாங்கம் முற்படுகின்றது?

சாரா ஜஸ்மின் தொடர்பில் மூன்று டி.என்.ஏ. மாதிரிகள் இருந்தன. ஒற்றுதான் உறுதியானது. அதை நாம் ஏற்கமாட்டோம். ஏன் அரசாங்கத்தால் ஏஎன்ஏ பரிசோதனையை மீண்டும் நடத்த முடியாமல் உள்ளது?

நீதிக்காக சுயாதீன சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும். ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட வேண்டும்-என்றார். (அ)

வறட்சியான காலநிலை

# தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த கோரிக்கை

கொழும்பு, ஜூலை 11

தற்போது நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக, நீரை முடிந்தவரை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபை பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

நிலவும் வறட்சியான காலநிலையினால் முக்கிய நீர் ஆதாரங்களில் நீர் மட்டம் வேகமாகக் குறைந்து வருவதோடு நீரின் பயன்பாடு அதிகரித்து வருவதாகவும், எனவே, அன்றாட பயன்பாட்டிற்கு போதுமான நீரை சேமித்து, சிக்கனமாக பயன்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளது.

எனவே, குடிதண்ணீர் விநியோகம் குறைவாக இருப்பதால், அனைவரின் அத்தியாவசிய குடிதண்ணீர் மற்றும் சுகாதாரத் தேவைகளுக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசியமற்ற நடவடிக்கைகளுக்கு தண்ணீரைப் பயன்படுத்துவதைக் குறைத்து, அத்தியாவசிய அன்றாட நடவடிக்கைகளுக்கு மட்டுமே நீரை பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை கேட்டுக்கொள்கிறது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளுக்கு 1939 என்ற துரித இலக்கத்திற்கு அழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வீதியை விட்டு விலகி பள்ளத்தில் கவிழ்ந்தது வான்!

கொழும்பு, ஜூலை 11

மாத்தறையிலிருந்து, நுவரெலியாவுக்கு இளைஞர்கள் குழுவை ஏற்றிச் சென்ற வான் ஒன்று, வீதியை விட்டு விலகி 70 அடி பள்ளத்தில் வீழ்ந்துள்ளது.

வானில் பயணித்த எட்டு பேர் பலத்த காயங்களுக்குள்ளாகி, நுவரெலியா மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக, நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

ஹற்றன்-நுவரெலியா பிரதான வீதியில், நானுஓயா டெஸ்போட் தோட்ட பகுதியில் நேற்று அதிகாலை 5 மணியளவில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

வானின் சாரதிக்கு ஏற்பட்ட தூக்கக் கலக்கம் காரணமாக, வான் வீதியை விட்டு விலகி பள்ளத்தில் கவிழ்ந்துள்ளதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரிவிக்கப்படுகின்றது.(அ)

# தேசிய ஆராய்ச்சி முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கு புதிய குழு

கொழும்பு, ஜூலை 11

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் துறையில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கும் வகையில், எமது நாட்டில் முதல் முறையாக தேசிய ஆராய்ச்சித் தேவைகளைக் கண்டறிந்து முன்னுரிமை அளிப்பதற்காக ஒரு புதிய தற்காலிகக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

தேசிய அபிவிருத்தி இலக்குகள் மற்றும் தேசியத் தேவைகளின் அடிப்படையில் நாட்டில் மேற்கொள்ளப்படும் பல்வேறு ஆராய்ச்சி நடவடிக்கைகளை முன்னுரிமை அடிப்படையில் வகைப்படுத்துவதே இந்தக் குழுவின் முக்கிய நோக்கமாகும்.

விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பேராசிரியர் கோமிக உடுகமசூரிய மற்றும் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் தேசிய விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் ரொஹான் பெர்னாண்டோ ஆகியோர் இந்தக் குழுவிற்குத் தலைமை தாங்குவார்கள். பல்வேறு துறைகளைச் சேர்ந்த முன்னணி நிபுணர்கள் 20 பேர் இந்தக் குழுவில் இடம்பெறுவர்.

பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், கைத்தொழில் மற்றும் அரச நிறுவனங்களில் செயல்படுத்தப்படும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கொள்கைகளை தேசிய வளர்ச்சி இலக்குகளுடன் சீரமைப்பதும், தேசிய வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியை உரியவகையில் பயன்படுத்துவதற்காக ஆராய்ச்சி முன்னுரிமைகளின் அடிப்படையில் நிதி ஒதுக்கீட்டை ஊக்குவிப்பதும் இந்தக் குழுவின் ஏனைய முக்கிய பணிகளாகும். (அ)

# "மக்கள் தமது தாய்மொழியில் சேவைகளை பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு வேண்டும்"

கொழும்பு, ஜூலை 11

"வளமான நாடு -அழகான வாழ்க்கை" எனும் எமது தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு அமைய, சகல குடிமக்களுக்கும் தேவைப்படுகின்ற சேவைகளை தத்தமது தாய்மொழி மற்றும், சைகை மொழி மூலமாக பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் நாட்டின் தேசிய கொள்கை செயல்படுத்தப்பட வேண்டும் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சின் ஏற்பாட்டில் இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற "மறுமலர்ச்சியின் எதிர்காலப் பாதை" எனும் தலைப்பில் நடத்தப்பட்ட, தேசிய மொழிகள் வாரத்தின் இறுதி நாள் விழாவில் பங்கேற்று உரையாற்றியபோதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

"மொழியை வளர்ப்போம் - இதயங்களை வெல்வோம்" எனும் தலைப்பில் ஜூலை மாதம் முதலாம் திகதி ஆரம்பமான அரச மொழிகள் தினத்திலிருந்து, ஏழு தினங்கள் நடைபெற்ற அரச மொழி வாரத்தின் இறுதி விழா பிரதமரினதும், நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷண நாணாயக்கார ஆகியோரின் பங்குபற்றலுடன் நடைபெற்றது.

இதன்போது மேலும் கருத்துகளைத் தெரிவித்த பிரதமர்-

தேசிய மொழிகள் வாரம் என்பது மொழிக் கொள்கையில் கவனம் செலுத்தி அதை அங்கீகரிக்கும் வாரம் மாத்திரமல்ல, அது மொழியின் அடையாளம், மரியாதை மற்றும் அனைத்து மக்களையும் ஒன்றிணைத்து அமைதியான சமுதாயத்தை கட்டியெழுப்புவதில் மொழியின் தீர்க்கமான பங்கைப் பற்றி கவனம் செலுத்தப்பட்ட ஒரு வாரமும் ஆகும்.

நீதிமன்றம், பொலிஸ், கல்வி, அரச நிறுவனங்கள் மற்றும் அரச நிர்வாகம் போன்ற அத்தியாவசிய நிறுவனங்களில் தமது தாய்மொழி மூலம் சேவைகளைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு இல்லை என்பதை ஏதேனும் ஒரு இனத்தவர் உணர்வார்களாக இருப்பின், அது வெறுமனே சேவை வழங்கல் பற்றிய பிரச்சினை மட்டுமல்ல.

அத்தகைய சந்தர்ப்பங்களில், அந்த இனத்தவர் "நாம் இந்த நாட்டுக்குச் சொந்தமானவர்கள் அல்ல, அந்நியர்களே" என்ற எண்ணம் இயல்பாகவே ஏற்படக்கூடும். ஆகையினால் மொழியைப் பயன்படுத்தும் போது சகல மக்களுக்கும் சம உரிமையும் மரியாதையும் கிடைப்பதை உறுதிப்படுத்தவேண்டும்.

ஆகையினால், சிங்கள மற்றும் தமிழ் மாணவர்களுக்கு மற்றவர்களின் மொழிகளைக் கற்கக்கூடிய பாடசாலைகள், நோயாளிகளுக்கு நமது நோய் பற்றி விவரங்களை தமக்கு மிகவும் நெருங்கிய உணர்வுபூர்வமான மொழியில் விளக்கக்கூடிய, தமக்குரிய சலுகைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வைத்தியசாலைகள் இவை ஒன்றும் சொகுசான வசதிகள் அல்ல.

நல்லிணக்கம் மிக்க ஒரு சமூகத்தில் செயற்பாட்டு ரீதியாகவே இருக்க வேண்டிய இயல்பான நிலைமைகளாகும். 2026 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படவிருக்கும் புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் நாட்டின் அனைத்து மொழிகளினதும் முக்கியத்துவத்தை பிள்ளைகளால் நன்கு உணரக்கூடிய விதத்திலும், மொழியை வெறுமனே ஒரு பாடம் என்பதற்கு அப்பால் சென்ற முக்கியத்துவத்துடன் கற்பிக்கும் வழிமுறைகளை உள்வாங்கப்பட்டிருப்பதின் நோக்கமும் அதுவே ஆகும்-என்றார்.

# சாரா ஜஸ்மினின் டி.என்.ஏ. பரிசோதனையில் சந்தேகம்

கொழும்பு, ஜூலை 11

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய புலஸ்தினி மகேந்திரன் எனப்படும் சாரா ஜஸ்மின் உயிரிழந்துவிட்டாரா என்பது குறித்தும், டி.என்.ஏ பரிசோதனை தொடர்பிலும் பலத்த சந்தேகம் உள்ளது. அவை தொடர்பில் சிஐடியினர் விசாரணை நடத்திவருகின்றனர்."

-இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-சஹ்ரான் குழுவின் பிரபல உறுப்பினரான புலஸ்தினி மகேந்திரனின் எனப்படும் சாரா ஜஸ்மின் 2019 ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி சாய்ந்தமருது பகுதியில் இடம்பெற்ற தற்கொலை தாக்குதலில் உயிரிழந்துவிட்டார் என தகவல் வெளியாகியது. அது தொடர்பில் இரண்டு டிஎன்ஏ பரிசோதனைகள் இடம்பெற்றன. அவை இரண்டும் சாரா ஜஸ்மினின் நெருங்கிய உறவினர்களுடன் ஒத்துப்போகவில்லை.

மூன்றாவது தடவை சாரா ஜஸ்மினின் தாயுடன் அது ஒத்துப்போயுள்ளது. அப்போது சரத்வீரசேகரவே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக இருந்தார்.

அந்த மூன்றாவது டிஎன்ஏ மாதிரி மற்றும் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பில் பலத்த சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்களை வெளியிட முடியாது. சிஐடியினரால் அது தொடர்பான தகவல்கள் நீதிமன்றத்தில் முன்வைக்கப்படும்.

சாரா ஜஸ்மின் உயிரிழந்துவிட்டாரா இல்லையா என்பது தொடர்பிலும் சந்தேகம் உள்ளது. அது தொடர்பிலும் சிஐடியினர் விசாரித்துவருகின்றனர்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடையாளம் காணப்பட்டுள்ள டெங்கு நோயாளரில் 27 வீதமானோர் சிறுவர்!

கொழும்பு, ஜூலை 11

நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள டெங்கு நோயாளர்களில் 27 வீதமானோர் சிறுவர்கள் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் தொடர்பி இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் விசேட வைத்தியநிபுணர் பிரஷீலா சமரவீர தெரிவிக்கையில்-

தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தில்போது நாடளாவிய ரீதியில் உள்ள சுமார் 226 பாடசாலைகள் நுளம்பு மற்றும் நுளம்புக் குடம்பிகள் பெருகும் இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ள டெங்கு நோயாளர்களில் 27 வீதமானோர் சிறுவர்களாவர்.

இந்நிலையில் பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு அரசாங்கத்தின் "கிளீன் சிறிலங்கா" வேலைத் திட்டத்துக்கமைய நேற்று செவ்வாய்க்கிழமை முதல் அனைத்து பாடசாலைகளிலும் சுத்தம் செய்வதற்கான விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தேசிய நுளம்பு ஒழிப்பு வாரத்தின் போது சுமார் 1 இலட்சத்து 44 ஆயிரத்து 250 இடங்கள் அதிகாரிகளினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், இதன்போது 35 ஆயிரத்து 495 பகுதிகள் நுளம்புகள் பல்கிப் பெருகக்கூடிய இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 4,275 பகுதிகளில் நுளம்புக் குடம்பிகளும் கண்டறியப்பட்டுள்ளன. அத்தோடு 3812 சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், 982 நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு 8.5 சதவீதம் வழிபாட்டுத்தலங்கள் அமைந்திருந்த பகுதிகளில் நுளம்பு குடம்பிகள் அடையாளம் காணப்பட்டதுடன். 25 சதவீதமான வீடுகள் டெங்கு அபாயமிக்க இடங்களாகவும் குறிப்பிடப்பட்டுள்ளன. எவ்வாறெனினும் அரச நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளுடன் ஒப்பிடும் போது வீடுகள் ஓரளவு பாதுகாப்பான நிலைமையில் உள்ளது.-என்றார். (அ)

## ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டோருக்கு நீதி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்!

### ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை

கொழும்பு, ஜூலை 11

**உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்ட கத்தோலிக்க மக்களுக்கு நீதியை பெற்றுக்கொடுப்பதாக தெரிவித்து ஆட்சிக்கு வந்த அரசாங்கம், அதுதொடர்பில் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அந்த மக்களை ஏமாற்றி இருக்கிறது. அதனால் அரசாங்கம் அந்த மக்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கு தேவையான ஒத்துழைப்பு வழங்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பான சபை ஒத்துவைப்புவேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-2019 ஜனாதிபதி தேர்தலுக்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தை பயன்படுத்திக்கொண்டு அன்று கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவானார்.

அதேபோன்று 2024இல் தேசிய மக்கள் சக்தி, இந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுப்பதாக வாக்குறுதியளித்து அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதி பதவிக்கு வந்தார்.

அதனால் இந்த தாக்குதல் காரணமாக அரசியல் கட்சியாக எமக்கே பாதிப்பு ஏற்பட்டது. அதேபோன்று இந்த தாக்குதலில் பிரதானமாக பாதிக்கப்பட்டது கத்தோலிக்க மக்கள். அடுத்தபடியாக முஸ்லிம் மக்களாகும். அன்று ஏற்பட்ட அழுத்தம் காரணமாக எமது அரசாங்கத்தில் இருந்து முஸ்லிம் அமைச்சர்கள் அனைவரும் பதவி விலகினார்கள்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக்கா கெடுப்பதாகவும் தாக்குதலுக்கு சம்பந்தப்பட்டவர்களை சட்டத்துக்கு முன் கொண்டுவருவதாகவும் தெரிவித்து ஆட்சிக்கு வந்த, இந்த அரசாங்கம் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை.

குறைந்தபட்சம் இந்திய வெளிவிவகார அமைச்சர் நாட்டுக்கு வந்தபோது, இந்தியாவுக்கு தப்பிச்சென்ற சாரா ஜெஸ்மின் தொடர்பில் கேட்டார்களா? ஆனால் அரசாங்கம் இது தொடர்பில் மிகவும் மெத்தன போக்கையே கடைப்பிடித்து வருகிறது. அதனால் அரசாங்கம் இந்த விடயத்தை விரைவுபடுத்துமாறு தெரிவிக்கிறோம்.

மேலும் சஹ்ரானுக்கு மேல் ஒரு தலைவர் இருப்பதாக முன்னாள் சட்டமா அதிபர் தெரிவித்திருந்தார். அப்படியானால் அவர் யார் என்பதை வெளிப்படுத்தும் பொறுப்பு அரசாங்கத்துக்கு இருக்கிறது.

அதேபோன்று இந்த சம்பவம் தொடர்பான ஜனாதிபதி விசாரணை குழுவுக்கு சாட்சி வழங்க சென்ற அதிகாரி, சாட்சி தெரிவிப்பதற்கு பதிலாக, பிரதான சூத்திரதாரி யார் என்பதை துண்டு ஒன்றில் எழுதி கொடுத்தார்.

அது யார் என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும். தற்போது பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் இந்த சம்பவம் தொடர்பில் தெரிவிக்கும் அனைத்து விடயங்களும் எமது அரசாங்க காலத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் வெளிவந்த விடயங்களாகும்.

புதிய விடயமாக பிள்ளையானை கைதுசெய்து சிறையில் அடைத்திருக்கிறார்கள். அதனைத் தவிர வேறு எந்த விடயத்தையும் வெளிப்படுத்தவில்லை.

சிறிய சஹ்ரானின் ஆலாசேகரை கண்டுபிடித்தால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் உண்மை நிலையை தெரிந்துகொள்ளலாம் என அநுரகுமார திஸாநாயக்க எதிர்க்கட்சியில் இருக்கும்போது தெரிவித்தார்.

ஆனால் தற்போது அவர் ஜனாதிபதி, சிறிய சஹ்ரான் யார் என்பது தொடர்பில் எப்.பி.ஐ. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனால் அரசாங்கம் இந்த விடயங்களை வெளிப்படுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரியை வெளிப்படுத்துவதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார். எங்கே வெளிப்படுத்தினீர்களா? அரசாங்கம் கத்தோலிக்க மக்களை ஏமாற்றியுள்ளது.

கர்தினால் உள்ளிட்ட கத்தோலிக்க மக்களுக்கு இந்த அரசாங்கத்தின் மீது இருந்த நம்பிக்கை தற்போது இழந்து வருகிறது. கத்தோலிக்க மக்களின் வாக்குகளை பெற்றுக் கொண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் தற்போது அவர்களை ஏமாற்றி இருக்கிறது.

அதனால் அரசாங்கம் அந்த மக்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கு தேவையான ஒத்துழைப்பு வழங்க நாங்கள் தயாராக இருக்கிறோம்-என்றார். (அ)

## ஜனாதிபதி அநுரவின் பெயரை தவறாக எழுதியுள்ளார் ட்ரம்ப்!

கொழும்பு, ஜூலை 11

இலங்கையின் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் பெயரை, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தற்செயலாகத் தவறாக எழுதியமை சமூக ஊடகங்களில் அதிகமாகப் பேசப்பட்டு வருகிறது.

இலங்கை ஏற்றுமதிகளுக்கு 30 வீத வரி விதிப்பை அறிவிக்கும் கடிதம், நேற்று இலங்கை உட்பட 6 நாடுகளுக்கு அனுப்பப்பட்டது.

இந்தக் கடிதத்திலேயே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை, டொனால்ட் ட்ரம்ப், "அருண" குமார திசாநாயக்க என்று குறிப்பிட்டுள்ளார்.

2025 ஜூலை 9 திகதியிட்டு வெள்ளை மாளிகையின், அதிகாரபூர்வ கடிதத் தலைப்பில் இந்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த தவறைச் சுட்டிக் காட்டி, சமூக ஊடகங்களில் கருத்துக்கள் வெளியாகி வருகின்றன. (அ)

## குற்றப்புலனாய்வு திணைக்களத்தை அரசு அரசியல் தேவைக்காக பயன்படுத்துகிறது

### தயாசிறி ஜயசேகர குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 11

பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்கள் விடுவிப்பினால் தேசிய பாதுகாப்புக்கு ஏதேனும் அச்சுறுத்தல் காணப்படுமாயின், அது குறித்து ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, துறைமுக அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் துறைமுக பிரதி அமைச்சர் ஆகியோரை விசாரியுங்கள். அதை விடுத்து எம்மை விசாரிக்காதீர்கள். குற்றப்புலனாய்வு திணைக்களத்தையும் அரசாங்கம் தனது அரசியல் தேவைக்காக பயன்படுத்திக்கொள்கிறது என ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற அமர்வின்போது சிறப்புரிமை தொடர்பில் கேள்வியெழுப்பி உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-சுங்கத்தில் இருந்து பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட கொள்கலன்கள் தொடர்பில் ஊடக சந்திப்பில் குறிப்பிட்ட விடயங்களுக்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்காக அழைக்கப்பட்டேன். எதிர்க்கட்சியின் உறுப்பினர்களான காவிந்த ஜயவர்தன, சித்ரால பெர்னாண்டோ, முஜிபூர் ரஹ்மான் ஆகியோரும் இவ்விடயம் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார்கள்.

ஊடக சந்திப்பில் குறிப்பிடும் விடயங்களை குற்றவியல் குற்றமாக கருதி குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் விசாரணைகளை மேற்கொள்வதாயின் பாராளுமன்ற உறுப்பினர்களின் பேச்சுரிமை எந்தளவுக்கு அச்சுறுத்தலுக்குள்ளாகும் என்பதை அவதானிக்கவேண்டும்- என்றார்.

இதனைத் தொடர்ந்து எழுந்து உரையாற்றிய ஆளும் கட்சியின் பிரதம கொறடாவான நளிந்த ஜயதிஸ்ஸ, ஊடக சந்திப்பை நடத்தியதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கவில்லை. தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று குறிப்பிட்ட விடயத்துக்காகவே இவர் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார்-என்றார்.

மீண்டும் எழுந்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட கொள்கலன்கள் தொடர்பில் ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் பல விடயங்களை குறிப்பிட்டார்கள். இவ்விடயத்தில் தேசிய பாதுகாப்புக்கு ஏதேனும் அச்சுறுத்தல் காணப்படுமாயின் நிதி அமைச்சரான ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, துறைமுக அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் துறைமுக அபிவிருத்தி பிரதி அமைச்சர் ஆகியோரை விசாரியுங்கள். அதனை விடுத்து குற்றப்புலனாய்வு திணைக்களத்தை அரசியல்மயப்படுத்தி எம்மை விசாரிக்காதீர்கள்-என்றார். (அ)

## ஹோட்டலில் தங்கியிருந்தவர்கள் விவரம் அரச புலனாய்வு பிரிவில்!

கொழும்பு, ஜூலை 11

2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி கொழும்பில் உள்ள தாஜ் சமுத்திரா ஹோட்டலில் தற்கொலை குண்டு தாக்குதலை நடத்துவதற்கு முயற்சிக்கப்பட்டமைக்கு முதல் நாள், அந்த விருந்தகத்தில் தங்கியுள்ளவர்களின் பெயர் விவரங்கள், அரச புலனாய்வுப் பிரிவினருக்கு வழங்கப்பட்டதாக அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

அங்கு தற்கொலை குண்டு தாக்குதலை மேற்கொள்ளும் நோக்குடன், சந்தேகநபர் அந்த ஹோட்டலில் தங்கியிருந்துள்ளார். இந்நிலையில், விருந்தகத்தினால், வழங்கப்பட்ட தகவல்களைக் கொண்டு புலனாய்வு அதிகாரிகள் செயற்பட்டிருந்தால் ஏப்ரல் 21 தாக்குதலை தவிர்த்திருக்க முடியும்.

இந்த விடயம் தொடர்பிலும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் தீவிரமான விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். (அ)

## நீதிமன்றுள் துப்பாக்கிச் சூடு நடத்த வழிகாட்டியவர் மலேசியாவில் கைது

கொழும்பு, ஜூலை 11


கணேமுல்ல சஞ்சீவின் கொலை உட்பட பல்வேறு கொலைகளுடன் தொடர்புடைய பாதாள உலக குழு உறுப்பினர் கெஹல்பத்தர பத்மே கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிவப்பு பிடியாணை பிறப்பிக்கப்பட்ட கெஹல்பத்தர பத்மே என்ற மனுதினு பத்மசிறி பெரேரா, மலேசியக் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

கெஹல்பத்தர பத்மேவவின் வழிகாட்டலில், கணேமுல்ல சஞ்சீவ கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்ற வளாகத்தில் சுட்டுக்கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறையில் சிறுபோக நெல் அறுவடை ஆரம்பம்



**கல்முனை, ஜூலை 11**

**அம்பாறை மாவட்டத்தில் இம்முறை மேற்கொள்ளப்பட்டு வந்த சிறுபோகத்துக்கான நெல் அறுவடை மிக துரிதமாக நடைபெற்று வருவதாக அம்பாறை மாவட்ட விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.**

அம்பாறை மாவட்டத்தில் சுமார் 55, 285 ஹெக்டேயரில் மேற்கொள்ளப்பட்ட நெற் செய்கையின் மூலம் சுமார் 02 இலட்சத்து 65 ஆயிரத்து736 மெற்றிக் தொன் நெல் அறுவடையாக எதிர்பார்க்கப்படுவதுடன் இது தேசிய நெல் உற்பத்தியில் இம் மாவட்டம் 12.7 வீத பங்களிப்பை செய்து வருவதாக அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் நெல் உற்பத்தி செய்யும் முதல் மூன்று மாவட்டங்களிலும் அம்பாறை மாவட்டமும் முதன்மை வகிக்கின்ற நிலையில், இம்முறை மேற்கொள்ளப்பட்ட நெல் உற்பத்தியில் கனிசமானவை "சிவப்பு நாடு" இனத்தைச் சேர்ந்தவை ஆகும்.

நாவிதன்வெளி, அக்கரைப்பற்று, ஒலுவில், நிந்தவூர் , அட்டாளைச்சேனை, சம்மாந்துறை போன்ற பிரதேசங்களில் தற்போது அறுவடை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தற்போது அறுவடை செய்யப்பட்டு வரும் உலர வைக்காத நெல் ஒரு கிலோ 100 ரூபாய் முதல் 105 ரூபாய் வரை தனியார் நெல் வியாபாரிகளால் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது. (எ-01)



## வீதி அபிவிருத்தி அமைச்சின் முன்னேற்ற மீளாய்வு கூட்டம்


திருகோணமலை, ஜூலை 11

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள திணைக்களத் தலைவர்களுடனான கலந்துரையாடல் திருகோணமலை தலைமைச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களான மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களம், மாகாண வீதி மற்றும் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை, மாகாண கட்டடங்கள் திணைக்களம் மற்றும் மாகாண வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றின் தலைவர்கள் இதில் பங்கேற்றனர்.

இதன்போது குறித்த திணைக்களங்களின் முன்னேற்ற மீளாய்வுகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டன. (எ)

## கழிவுகளை பிரித்து சேகரிக்கும் தொட்டிகள் மருத்துவமனைக்கு



திருகோணமலை, ஜூலை 11

நிலாவெளி - கோபாலபுரம் மாவட்ட சித்த ஆயுர்வேத மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவின் கழிவுகளை தரம் பிரித்து சேகரிப்பு செய்வதற்கான தொட்டிகளை குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் ஏ. முபாறக் நேற்று முன்தினம் வழங்கினார்.

மருத்துவமனையின் அத்தியட்சகர் என். நிறஞ்சன் இது தொடர்பில் விடுத்த வேண்டுகோளுக்கமைவாக பிரதேச சபையின் உறுப்பினர் ஜே. நிமலகாசனின் முயற்சியின் பயனாக இந்தக் கழிவுகள் சேகரிக்கும் தொட்டிகளை குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளரால் வழங்கப்பட்டன. (எ)

## ரூ. 11 இலட்சம் காசோலை வழங்கி மோசடியில் ஈடுபட்டவர் சிக்கினார்

ஏறாவூர், ஜூலை 11

மட்டக்களப்பு, ஏறாவூரில் முந்திரி பருப்பு வர்த்தகரிடம் ஒருவர் காசோலையை வழங்கி 11 இலட்சம் ரூபாய்க்கு முந்திரிகை பருப்பை கொள்வனவு செய்து கொண்டு, வழங்கிய காசோலைக்கான பணத்தை வழங்காது மோசடி செய்த ஒருவரை ஏறாவூர் பிரதேசத்தில் வைத்து மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவினர் கைது செய்தனர்.

குறித்த பிரதேசத்தில் முந்திரி பருப்பு வர்த்தகத்தில் ஈடுபடும் ஒருவரிடம் அந்தப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் திகதி ஒன்று இடப்பட்டு 11 இலட்சம் ரூபாய் காசோலை ஒன்றை வழங்கி அந்த தொகைக்கான முந்திரி பருப்பை கொள்வனவு செய்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த திகதியில் முந்திரி பருப்பை கொள்வனவு செய்தவர் வழங்கிய காசோலையை கொடுத்து பணத்தை பெற்றுக் கொள்வதற்காக வங்கிக்கு சென்று காசோலையை வழங்கிய போது அந்த காசோலைக்கான பணம் வங்கியில் வைப்பில் இல்லாததையடுத்து காசோலை திரும்பியது.

இதனையடுத்து திரும்பிய காசோலைக்கான பணத்தை குறித்த நபரிடம் தொடர்பு கொண்டு வாங்க முயற்சித்த போதும் அது முடியாததையடுத்து மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவிடம் காசோலை மோசடி தொடர்பாக குறித்த நபருக்கு எதிராக முறைப்பாடு செய்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக காசோலையை வழங்கிய நபரை கடந்த 07 ஆம் திகதி ஏறாவூரில் வைத்து கைது செய்து ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய போது அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டார். பணத்தை வழங்குவதாக நீதிமன்றில் அறிவித்ததையடுத்து அவரை அடுத்த வழக்கிற்கான திகதியிடப்பட்டு அன்றைய தினம் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டு அவரை பிணையில் செல்வதற்கு நீதிவான் அனுமதியளித்து பிணையில் விடுவித்தார். (எ)

## அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர்களுக்கு செயலமர்வு

அக்கரைப்பற்று, ஜூலை 11

அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்று மாநகர சபைக்கு புதிதாக தெரிவாகிய உறுப்பினர்களுக்கான சபை நடவடிக்கைகள் மற்றும் கூட்ட நடவடிக்கைகள், மாநகர சபை உறுப்பினர்களுக்கான மாநகர சபை சட்டங்கள், ஒழுங்குவிதிகள், சேவைகள் தொடர்பான செயலமர்வு சர்வதேச பங்காளிகள் நிறுவனத்தின் மூலம் அக்கரைப்பற்று மாநகர சபை முதல்வர் எம். அதாவுல்லாவின் வேண்டுகோளுக்கிணங்க நடைபெற்றது.

அக்கரைப்பற்று மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்ற இந்தச் செயலமர்வு, உறுப்பினர்களின் கடமைகளையும் பொறுப்புகளையும் மேம்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில், வளவாளர்களாக மாற்றத்துக்குரிய சர்வதேச பங்காளிகள் நிறுவனத்தின் சிரேஷ்ட நிகழ்ச்சித்திட்ட ஆலோசகர்களான இப்திகார் ரிஷாத் ஷரீப், எம். வலீத் ஆகியோர் கலந்து கொண்டு விரிவான விளக்கங்களை வழங்கினர். இவர்களின் அனுபவமிக்க வழிகாட்டல் புதிய உறுப்பினர்களுக்கு பெரிதும் உதவியது. (எ)

## அரச தொழில் வாய்ப்புகளுக்குள் மாற்றுத்திறனாளிகள் உள்ளீர்ப்பு

திருகோணமலை, ஜூலை 11

எதிர்காலத்தில் அரச தொழில் வாய்ப்புகளுக்குள் மாற்றுத்திறனாளிகளை உள்ளீர்ப்பது குறித்து ஆராயப்பட்டுள்ளது.

சமூக சேவைகள் திணைக்களத்தில் இணைக்கப்பட்டுள்ள சமூக சேவைகள் உத்தியோகத்தர்களுக்கான மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சுதாகரன் தலைமையில் மாவட்ட செயலக உப ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் தொடர்பான சமூக சேவைகள் திணைக்களத்தின் செயல்பாடுகள் மற்றும் முன்னேற்றம் குறித்து அனைத்து பிரதேச செயலக உத்தியோகத்தர்களுடன் விவாதிக்கப்பட்டது. எதிர்காலத்தில் மாற்றுத்திறனாளிகள் தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் அவர்களை தொழில் வாய்ப்புக்குள் உட்புகுத்தல் தொடர்பிலான முன்னேற்றங்கள் மிகவும் திருப்திகரமாக இருக்க வேண்டும் என்று இதன்போது மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கூறினார். (எ)

## பிரதேச செயலக கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டம்

திருகோணமலை, ஜூலை 11

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலக முகாமைத்துவ கணக்காய்வு குழுக் கூட்டம் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் திருகோணமலை மாவட்ட செயலக பிரதம உள்ளக கணக்காய்வாளர் பா. கேதீஸ்வரன் கலந்து கொண்டார்.

இதில் 2ஆம் காலாண்டுக்கான வெளிக்கள உத்தியோகத்தர்களால் செயல்பாட்டு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல விடயங்கள் மீதான மதிப்பீடு, மீளாய்வு தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

இதில் உதவி பிரதேச செயலாளர் இரா. பிரசாந்தன், கணக்காய்வு அத்தியட்சகர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் வான்வழி தாக்குதல் காஸாவில் 40 பேர் உயிரிழப்பு

காஸா, ஜுலை 11

**காஸாவில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில் 40 பேர் பலியாகினர்.**

காஸா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாதத் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 1139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலிலிருந்து 251 பேரை பணயக் கைதிகளாக காஸா முனைக்கு ஹமாஸ் அமைப்பினர் கடத்திச் சென்றனர்.

இதையடுத்து, ஹமாஸ் அமைப்பு மீது போர் அறிவித்த இஸ்ரேல், காஸா முனையில் அதிரடி தாக்குதல் நடத்தி வருகிறது. இதேவேளை, பணயக் கைதிகளில் பலரை ஒப்பந்த அடிப்படையிலும் இராணுவ நடவடிக்கை மூலமும் இஸ்ரேல் மீட்டுள்ளது.

பணயக் கைதிகளில் சிலர் ஹமாஸ் ஆயுதக்குழுவினரால் கொல்லப்பட்ட நிலையில் அவர்களின் சடலங்களும் மீட்கப்பட்டன.

இதேவேளை, பணயக் கைதிகளை மீட்கவும், ஹமாஸ் அமைப்பினரை முழுமையாக ஒழிக்கும் நோக்கிலும் காஸா முனையில் இஸ்ரேல் தொடர்ந்து தரைவழி, வான்வழித் தாக்குதலை நடத்தி வருகிறது.

இந்த நிலையில், காஸா முனையில் நேற்று முன்தினம் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 40 பேர் உயிரிழந்தனர். இதன் மூலம் இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போரில் காஸாவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 57 ஆயிரத்து 575 ஆக அதிகரித்தது. (எ)

## பாப்பரசர் லியோவுடன் ஜெலன்ஸ்கி சந்திப்பு




ரோம், ஜுலை 11

இத்தாலி தலைநகர் ரோமில் நடைபெறும் உக்ரைன் மீட்பு மாநாட்டில் கலந்து கொள்ள உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி இத்தாலிக்கு சென்றுள்ளார். இதையடுத்து, ரோமிலுள்ள வத்திக்கான் நகரத்தின் தலைவரும் கத்தோலிக்க திருச்சபையின் தலைவருமான பாப்பரசர் லியோவை சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில், ஜனாதிபதி ஜெலன்ஸ்கி ரஷ்யாவால் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் ஆயிரக்கணக்கான குழந்தைகளை உக்ரைன் மீட்க உதவிய, பேராலயத்துக்கு தனது நன்றிகளைத் தெரிவித்ததாகவும், இருவரும் நீதியான மற்றும் நீடித்த அமைதிக்கான அவசர தேவை குறித்து கலந்துரையாடியதாகவும் வாடிகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, போரினால் பாதிக்கப்பட்ட உக்ரைன் நாட்டு மக்களுக்காக பாப்பரசர் தனது வருத்தங்களைத் தெரிவித்ததுடன், கைதிகளின் விடுதலைக்கு இருதரப்பும் இணைந்து முடிவுகாண வேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## சரக்கு கப்பல் மூழ்கடிப்பு



ஏடன், ஜுலை 11

செங்கடலில் சரக்கு கப்பலை மூழ்கடித்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் அட்டூழியத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஓராண்டுக்கு மேலாக இஸ்ரேல் நடத்திய தாக்குதலில், காஸா பகுதியில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் உயிரிழந்தனர். ஒர் இலட்சத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இதனை காஸா சுகாதார அதிகாரிகள் உறுதி செய்தனர்.

பலஸ்தீனியர்களுக்கு ஆதரவாக ஹவுதி கிளர்ச்சியாளர்களும் ஒரு புறம் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் செங்கடல் பகுதியை கடந்து செல்லும் சரக்கு மற்றும் பயணிகள் கப்பலை இலக்காக கொண்டு தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், செங்கடலில் ஏமன் நாட்டை சேர்ந்த ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீண்டும் தாக்குதலில் ஈடுபட தொடங்கியுள்ளனர். இதில், லைபீரிய நாட்டு கொடியுடன் வந்த எடர்னிட்டி சி என்ற சரக்கு கப்பலை கடுமையாக தாக்கினர். இதில் கப்பல் பணியாளர்கள் 3 பேர் பலியாகினர்.

இதுபற்றி ஐரோப்பிய கடற்படை அதிகாரிகள் கூறும்போது, கப்பலிலிருந்த 25 பேரில் 6 பேர் மீட்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தனர். எனினும், கிளர்ச்சியாளர்களின் கடுமையான தாக்குதலில் அந்த கப்பல் மூழ்கத் தொடங்கியது. அதனை மீட்பதற்கான முயற்சி பலனிக்கவில்லை. இதனால், பணியாளர்களின் கதி என்ன என்று தெரியவில்லை. இது செங்கடல் பகுதியில் கப்பல்களின் பாதுகாப்பு பற்றிய கேள்விகளை எழுப்பியுள்ளது. (எ)

# முன்னாள் ஜனாதிபதியை கைது செய்வதற்கு அனுமதி

## தென்கொரியாவில் பரபரப்பு

சியோல், ஜுலை 11

தென்கொரியாவின் முன்னாள் ஜனாதிபதி யூன் சுக் இயோலை கைது செய்ய நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

தென்கொரியாவின் முன்னாள் ஜனாதிபதி யூன் சுக் இயோல் கடந்த டிசெம்பர் மாதம் அவசர நிலையை பிரகடனப்படுத்தினார். இந்த அறிவிப்புக்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்தன. பொது மக்களும் எதிர்த்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து அவசர நிலை உத்தரவை ஜனாதிபதி திரும்பப்பெற்றார்.

இதையடுத்து, அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி நாட்டில் அவசர நிலையை பிரகடனப்படுத்தி கிளர்ச்சிக்கு நிகரான குற்றச் செயலில் ஈடுபட்டதாக



கடந்த மார்ச் மாதம் யூன் சுக் இயோல் கைது செய்யப்பட்ட நிலையில் பின்னர் உடனடியாக விடுதலை செய்யப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி சுக் இயோலை பதவி நீக்கம் செய்ய எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் தீர்மானம் கொண்டுவந்தன. வாக்கெடுப்பின் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கடந்த ஏப்ரல் மாதம் ஜனாதிபதி பதவியிலிருந்து யூன் சுக் இயோல் நீக்கப்பட்டார். புதிய ஜனாதிபதியாக லீ ஜே-மியுங் செயல்பட்டு வருகிறார்.

இந்த நிலையில், நாட்டில் அவசர நிலையை பிரகடனம் செய்தது தொடர்பான வழக்கில் சாட்சிகளை அழிக்க முன்னாள் ஜனாதிபதி யூன் சுக் இயோல் முயற்சிப்பதாக அரசு தரப்பில் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை விசாரித்த நீதிமன்று முன்னாள் ஜனாதிபதி யூன் சுக் இயோலை கைது செய்ய அனுமதி வழங்கியது. இதையடுத்து, யூன் சுக் இயோல் விரைவில் கைது செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

## கவுதமாலாவில் 150இற்கும் மேற்பட்ட நிலநடுக்கங்கள்

கவுதமாலா சிற்றி, ஜுலை 11

கவுதமாலாவில் 150இற்கும் மேற்பட்ட நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளன. இதில், சிறுவன் உட்பட 4 பேர் உயிரிழந்தனர்.

கவுதமாலாவில் அடுத்தடுத்து 150இற்கும் மேற்பட்ட நிலநடுக்கங்கள் மற்றும் நில அதிர்வுகள் ஏற்பட்டன. கடந்த செவ்வாய்க்கிழமை மதியத்திலிருந்து, ரிக்டர் அளவுகோலில் 3.0 முதல் 5.7 ஆக நிலநடுக்கங்கள் பதிவாகியிருந்தன.

இதில், 4 பேர் பலியாகினர். இதனை அந்த நாட்டு ஜனாதிபதி பெர்னார்டோ ஆரிவாலோ உறுதிப்படுத்தியுள்ளார். (எ)

## பிரதமர் மோடிக்கு விருது



விண்ட்ஹோக், ஜுலை 11

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு நமீபியா நாட்டின் உயரிய விருதான தி மோஸ்ட் ஏன்சியன்ட் வெல்விட்ஸ்சியா மிராபிலிஸ் என்ற விருது வழங்கப்பட்டது. தலைநகர் விண்ட்ஹோக்கில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் பிரதமர் மோடிக்கு, அந்த நாட்டின் ஜனாதிபதி நெடும்போ நந்தி-தைத்வா இந்த விருதை வழங்கினார். (எ)

## நேபாளம் - சீனா எல்லையில் வெள்ளத்தால் 9 பேர் மரணம்

காத்மண்டு, ஜுலை 11

நேபாளம் - சீனா எல்லையில் கனமழை, வெள்ளப்பெருக்கால் 9 பேர் உயிரிழந்தனர்.

நேபாளம் - சீனா எல்லையில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. பருவமழை தீவிரமடைந்து வரும் நிலையில் இரு நாட்டின் எல்லைப்பகுதியில் உள்ள ரசுவா ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

மேலும், நேபாளம் - சீனாவை இணைக்கும் நட்பு பாலம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளது. இந்த நிலையில், வெள்ளப்பெருக்கால் நேபாளத்தில் 9 பேர் உயிரிழந்தனர். மேலும், 19 பேர் மாயமாகியுள்ளனர்.

வெள்ளத்தில் சிக்கிய 57 பேர் மீட்கப்பட்டுள்ளனர். இதேவேளை, வெள்ளத்தில் மாயமான எஞ்சியோரை தேடும் பணியில் மீட்புக்குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

# கனமழை, வெள்ளப்பெருக்கால் அமெரிக்காவில் 120 பேர் பலி!

வாஷிங்டன், ஜுலை 11

அமெரிக்காவில் கனமழை மற்றும் திடீர் வெள்ளத்தில் சிக்கி பலியான 120 பேரின் உடல்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்காவின் கடலோர மாகாணமான டெக்சாஸின் வனப்பகுதியையொட்டி மலை பிரதேசமான கெர் கவுண்டியுள்ளது. இந்த நகரை சுற்றியுள்ள வனப்பகுதிகளில் பல்வேறு சிற்றோடைகள், ஆறுகள் ஓடுகின்றன.

இந்த நிலையில் கடந்த 4ஆம் திகதி நள்ளிரவு கெர் கவுண்டியில் திடீரென மழை பெய்தது. அதிகாலை வரை கொட்டித் தீர்த்த கனமழை காரணமாக அங்குள்ள குவாடலூப் ஆற்றின் நீர்மட்டம் "கிடுகிடு" வென உயர்ந்தது. சுமார் 3 மணிநேரம் இடைவிடாது பெய்த கனமழை காரணமாக ஆற்றில் வெள்ளம் உருவாகி பெருக்கெடுத்து ஓடி யது. ஆற்றில் ஒரு மணி நேரத் திலேயே 19 அடிக்கு நீர்மட்டம் உயர்ந்தது.

வெள்ளப்பெருக்கு காரணமாக ஆற்றிலிருந்து வெளியேறிய அதிகபடியான தண்ணீர் ஊருக்குள் புகுந்தது. இந்த திடீர் வெள்ளத்தால் வீடுகள், வாகனங்கள் அடித்துச் செல்லப்பட்டன. பல இடங்கள் நீரில் மூழ்கி தத்தளித்தன. இதனால் பலர் வீடுகளின் மேற்கூரையில் ஏறி தஞ்சம டைந்தனர்.

வனப்பகுதி மற்றும் நகரங்களை இணைக்கும் வீதிகள், பாலங்கள் ஆகியவை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. இதனால் போக்குவரத்து துண்டிக்கப்பட்டது. அப்பகுதியில் அவசரநிலை பிரகடனப்படுத் தப்பட்டது. பேரிடர் மீட்புத்துறையினர் சுமார் 20இற்கும் மேற்பட்ட பிளாக் ஹாக் ஹெலி கொப்டர்கள் மூலமாக சம்பவ இடத்துக்கு விரைந்தனர். தன்னார்வலர்களும் உதவுகின்றனர்.

இந்த நிலையில் கனமழை மற்றும் திடீர் வெள்ளத்தில் சிக்கி பலியான 120 பேரின் உடல்கள் இதுவரை மீட்கப்பட் டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும் வெள்ளப்பெருக்கில் சிக்கி மாயமான 173 பேரை மீட்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதனால் பலி எண்ணிக்கை மேலும் உயரும் என்று அஞ்சப்படுகிறது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நாட்டின் பல்வேறு மாகாணங்களில் இருந்து நிவாரணப் பொருட்கள் குவிந்து வருகின்றன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்து அணியை வீழ்த்தி இந்திய மகளிர் அணி வெற்றி

மான்செஸ்டர், ஜூலை 11

6 விக்கெட்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணியை வீழ்த்தி இந்திய மகளிர் அணி வெற்றி பெற்றது.

இந்திய மகளிர் கிரிக்கெட் அணி இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 ரி - 20, 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இதில், ஏற்கனவே நடைபெற்ற 3 ரி- 20 ஆட்டங்களில் இந்தியா 2-1 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இந்த நிலையில் இரு அணிகளுக்கும் இடையேயான 4ஆவது ரி - 20 போட்டி மான்செஸ்டரில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 126 ஓட்டங்கள் சேர்த்தது. அந்த அணியின் சோபியா அதிகபட்சமாக 22 ஓட்டங்கள் சேர்த்தார். இந்தியா தரப்பில் அதிகபட்சமாக சிறீ சரணி, ராதா தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

இதையடுத்து, களமிறங்கிய இந்திய அணி 17 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்த 127 ஓட்டங்கள் எடுத்தது. இதனால் இங்கிலாந்தை 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்தியா வெற்றிபெற்றது. இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட ரி- 20 தொடரை 3-1 என்ற புள்ளிக் கணக்கில் இந்தியா வென்றது. இரு அணிகளுக்கும் இடையேயான கடைசி ரி - 20 ஆட்டம் இன்று நடைபெறுகிறது. (எ)





## விம்பிள்டன் ரென்னிஸில் ஜோகோவிச் முன்னேற்றம்

லண்டன், ஜூலை 11

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் நோவக் ஜோகோவிச் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

“கிராண்ட்ஸ்லாம்” போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதி ஆட்டம் ஒன்றில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச், இத்தாலி வீரர் பிளாவியோ கோபோலி உடன் மோதினார்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடி ஆதிக்கம் செலுத்திய ஜோகோவிச் 6(6) -7(8), 6-2, 7-5, 6-4 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றார். இதனால் ஜோகோவிச் அரையிறுதி சுற்றுக்கு முன்னேறினார். (எ)



## முத்தரப்பு ரி -20 தொடர் பின் ஆலென் விலகல்

வெலிங்டன், ஜூலை 11

முத்தரப்பு ரி - 20 தொடரிலிருந்து நியூசிலாந்து வீரர் பின் ஆலென் விலகியுள்ளார்.

நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, சிம்பாவே அணிகள் பங்கேற்கும் முத்தரப்பு ரி - 20 தொடர் சிம்பாவேயில் எதிர்வரும் 14ஆம் திகதி தொடங்குகிறது. இந்த தொடரில் ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா 2 முறை மோத வேண்டும். லீக் முடிவில் புள்ளிப்பட்டியலில் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டியில் விளையாடும்.

முத்தரப்பு தொடருக்கான நியூசிலாந்து அணி சில தினங்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டது. இந்த அணியில் அதிரடி ஆட்டக்காரரான பின் ஆலென் இடம் பிடித்திருந்தார். தற்போது மேஜர் லீக் கிரிக்கெட் தொடரில் சான் பிரான்சிஸ்கோ அணிக்காக விளையாடி வரும் பின் ஆலென் அங்கு காயத்தை சந்தித்ததாக கூறப்படுகிறது.

இதன் காரணமாக சிம்பாவேயில் நடைபெறவுள்ள முத்தரப்பு ரி - 20 தொடரிலிருந்து பின் ஆலென் விலகியுள்ளதாக நியூசிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. அவருக்குப் பதிலாக மாற்று வீரர் விரைவில் அறிவிக்கப்படுவார் எனவும் தெரிவித்துள்ளது. (எ)

## இங்கிலாந்து அணியில் இணைந்தார் ஆர்ச்சர்

லண்டன், ஜூலை 11

இங்கிலாந்து அணியில் ஜோப்ரா ஆர்ச்சர் மீண்டும் இணைந்துள்ளார்.

இந்தியா - இங்கிலாந்து அணிகள் இடையிலான 3 ஆவது டெஸ்ட் போட்டி நேற்று ஆரம்பித்தது. இதில் விளையாடும் இங்கிலாந்து அணியில்

சாக் கிராவ்லே, பென் டக்கெட், ஒல்லி போப், ஹாரி ப்ரூக், பென் ஸ்டோக்ஸ், ஜேமி ஸ்மித், கிறிஸ் வோக்ஸ், பிரைடன் கார்சே, ஜோப்ரா ஆர்ச்சர், ஷோயிப் பாஷிர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். 52 மாத இடைவெளிக்கு பிறகு ஜோப்ரா ஆர்ச்சர் மீண்டும் அணிக்குத் திரும்பியுள்ளார். காயம் காரணமாக கடந்த 2021ஆம் ஆண்டு முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஆர்ச்சர் விலகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# மூன்றாவது டெஸ்ட் நேற்று ஆரம்பம்; “கில்லுக்கு நெருக்கடி அதிகரிக்கும்”

லண்டன், ஜூலை 11

இந்திய அணியின் தலைவர் சுப்மன் கில்லுக்கு நெருக்கடி அதிகரிக்கும் என்று அந்த அணியின் முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலி தெரிவித்தார்.

இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி “ஆண்டர்சன்- டெண்டுல்கர்” கிண்ணத்துக்கான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் டெஸ்ட்டில் இங்கிலாந்தும் 2ஆவது டெஸ்ட்டில் இந்தியாவும் வெற்றிபெற்றன. இந்த நிலையில் மூன்றாவது டெஸ்ட் போட்டி லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நேற்றுத் தொடங்கியது.

இந்த நிலையில் கங்குலி அளித்த ஒரு பேட்டியில் கூறியதாவது, “இங்கிலாந்துக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் சுப்மன் கில் துடுப்பாட்டம் செய்த விதம் சிறப்பானதாகும். அதனைப் பார்த்து நான் ஆச்சரியப்படவில்லை. இந்திய கிரிக்கெட்டில் ஒவ்வொரு தலைமுறையிலும் சிறந்த வீரர்கள் உருவாகி கொண்டே இருப்பார்கள். அணியில் வெற்றிடம் ஏற்படும் போதெல்லாம் அதனை அடுத்த நிலை வீரர்கள் நிரப்புவார்கள். இந்திய கிரிக்கெட்டில் நிறைய திறமையான வீரர்கள் உள்ளனர். எனவே ஒவ்வொரு தலைமுறையிலும் நீங்கள் திறமையான வீரர்களை கண்டுபிடிக்க முடியும்.



புதிய அணித் தலைவர் சுப்மன் கில் அற்புதமாக செயல்படுகிறார். அவரது கிரிக்கெட் வாழ்க்கை புதிய பாதையை நோக்கிச் செல்லும் என்று நம்புகிறேன். இனிவரும் நாட்களில் அவர் அதிக நெருக்கடியை சந்திக்க நேரிடும். அடுத்த 3 டெஸ்ட்களில் நிச்சயம் நெருக்கடி அதிகரிக்கும் -என்றார். (எ)

## பாகிஸ்தான் அணியிலிருந்து பாபர் அஸாம், ரிஸ்வான் நீக்கம்

கராச்சி, ஜூலை 11

பாகிஸ்தான் அணியிலிருந்து பாபர் அஸாம், முகமது ரிஸ்வான் மற்றும் ஷாகீன் அப்ரிடி உள்ளிட்ட முன்னணி வீரர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.


பாகிஸ்தான் கிரிக்கெட் அணி பங்களாதேஷில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ரி- 20 தொடரில் விளையாடவுள்ளது. இதன்படி இவ்விரு அணிகள் இடையிலான முதல் ரி- 20 போட்டி எதிர்வரும் 20ஆம் திகதியும் 2ஆவது போட்டி 22ஆம் திகதியும் 3ஆவது மற்றும் கடைசி ரி - 20 போட்டி 24ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் இந்தப் போட்டிக்கான பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. சல்மான் அலி ஆகா தலைமையிலான இந்த அணியில் முன்னணி நட்சத்திர வீரர்களான பாபர் அஸாம், முகமது ரிஸ்வான் மற்றும் ஷாகீன் அப்ரிடி ஆகியோர் இடம்பெறவில்லை.

பாகிஸ்தான் அணி விவரம் பின்வருமாறு:-

சல்மான் அலி ஆகா, அப்ரார் அகமது, அகமது டானியல், பஹீம் அஷ்ரப், பகர் ஜமான், ஹசன் நவாஸ், ஹூசைன் தலாத், குஷ்தில் ஷா, முகமது அப்பாஸ் அப்ரிடி, முகமது ஹாரிஸ், முகமது நவாஸ், சாஹிப்சாதா பர்ஹான், சைம் அயூப், சல்மான் மிர்சா, சுப்யான் மொஹிம் ஆகியோர் அணியில் இடம்பெற்றுள்ளனர். (எ)

## உலகக்கிண்ண உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் பி. எஸ். ஜி.




வாஷிங்டன், ஜூலை 11

கிளப் உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடரில் பி. எஸ். ஜி. அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

கிளப் அணிகளுக்கான 21ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்ட போட்டி அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டம் ஒன்றில் ரியல் மட்ரிட் - பாரிஸ் செயின்ட்-ஜெர்மைன் (பி.எஸ்.ஜி.) அணிகள் மோதின.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்தி சிறப்பாக விளையாடிய பாரிஸ் செயின்ட்-ஜெர்மைன் அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதனால் அந்த அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

எதிர்வரும் 14ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் - செல்சி அணிகள் மோதுகின்றன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார்....

மோதியதில் விபத்து சம்பவித்ததாக முருங்கன் பொலிஸார் தெரிவித்தனர்.

இதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த நால்வரும் படுகாயமடைந்ததனர். அவர்கள் மன்னார் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிறுவன் உயிரிழந்தார். ஏனைய மூவரும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். படுகாயமடைந்தவர்களில் 12 வயது சிறுமி ஒருவரும் அடங்குவார்.

பட்டா வாகன சாரதியை முருங்கன் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

## அமெரிக்காவுடன்...

முழுமையான ஒத்துழைப்பு வழங்க தயாராகவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்படி விடயத்தை சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கைக்கு விதிக்கப்பட்ட வரியை 44 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாகக் குறைப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார். இந்த விடயத்தில் ஓரளவு வெற்றியை அவதானிக்க முடிகிறது.

காரணம் சில நாடுகளுக்கு எம்மைவிட அதிக வரி விதிக்கப்பட்டுள்ளது. இலங்கையும் போட்டித்தன்மைக்குள் உள்வாங்கப்பட வேண்டுமெனில், எம்முடன் போட்டியிடும் அமெரிக்காவின் சந்தையிலுள்ள ஏனைய நாடுகளுக்கு விதிக்கப்பட்டுள்ள வரி தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

எம்முடன், அதிக போட்டி தன்மை கொண்ட நாடு வியட்நாம் ஆகும். இதையடுத்து பங்களாதேஷ் காணப்படுகிறது. வியட்நாமுக்கு 20 சதவீதமும், பங்களாதேஷுக்கு 35 சதவீதமும் வரி விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பங்களாதேஷ் தற்போதும் அமெரிக்காவுடன் பேச்சுகளை முன்னெடுத்து வருகிறது. வியட்நாம் 20 சதவீதத்தை உறுதிப்படுத்தியுள்ளது. நாம் இந்த விவகாரத்தை அரசியலுக்கு அப்பால் நோக்குகிறோம்.

இது ஜே. வி. பி. அரசாங்கமா அல்லது ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கமா என்பது எமது கவலையல்ல. அனைத்து தரப்பினரும் ஏற்றுமதி தொழிற்துறையுடன் தொடர்புபட்டுள்ளனர்.

3 இலட்சத்து 60 ஆயிரம் தொழிலாளர்கள் ஆடை ஏற்று மதித்துறையை சார்ந்தவர்களாகவுள்ள னர். மேலும் 5 இலட்சத்து 50 ஆயிரம் தொழிலாளர்கள் மறைமுகமாக இத்துறையுடன் தொடர்புடையவர்க ளாகவுள்ளனர். எனவே, நாம் அரசியலை புறந்தள்ளி நாட்டுக்காக முன்வர வேண்டும்.

எனவேதான் எம்மிடமிருந்து ஏதேனும் ஒத்துழைப்பை எதிர்பார்ப் பதாயின், அதனை வழங்குவதற்கு நாம் தயாராக இருக்கிறோம். நாம் இதற்கு முன்னரே ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிடம் தெரிவித்திருந்தோம். எவ்வாறிருப்பினும், அரசாங்கத்திடமிருந்து எமக்கு எந்தவகையிலும் அழைப்பு விடுக்கப்படவில்லை.

நாம் தற்போது மலை உச்சியில் நிற்கிறோம். ஒருபுறம் சாய்ந்தால் விழுந்து விடுவோம். மறுபுறம் சென்றால் மீள முடியும். கிடைத்துள்ள இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு நன்மையைப் பெற்றுக் கொள்வோம் என அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

மீண்டும் ட்ரம்புடன் பேச்சுகளை ஆரம்பிப்போம். எதிர்க்கட்சி என்ற ரீதியில் அதிகபட்ச ஒத்துழைப்பை வழங்குவதற்கு நாம் தயாராகவுள்ளோம். அரசியலுக்கு அப்பால் நாட்டுக்காக ஒன்றிணைந்து செயல்பட வேண்டிய சந்தர்ப்பமாகவே நாம் இதனைக் காண்கிறோம். - என்றார். (ஐ)

# அரசாங்கத்துக்கு எதிராக பேசுவோர் சி. ஐ. டி.க்கு அழைக்கப்படுகின்றனர்

## விமல் வீரவன்ஸ தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 11

பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்கள் பற்றி பல விடயங்களை குறிப்பிட்டு மக்களுக்கு இதனை அறிவுறுத்தியவர்கள் தற்போது இலக்கு வைக்கப்பட்டுள்ளார்கள். பேச்சு சுதந்திரம் திட்டமிட்ட வகையில் மறுக்கப்படுகிறது. அரசாங்கத்துக்கு எதிராக பேசுபவர்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்படுகிறார்கள் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள் ளார்.

நேற்று கொழும்பில் நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

சிவப்பு முத்திரை பதிக்கப்பட்ட பெரும்பாலான கொள்கலன்கள் எவ்வித பரிசோதனைகளுமின்றி விடுவிக்கப்பட்டமை பாரதூரமானது என்று நாங்கள் குறிப்பிட்ட விடயத்தையே ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவும் குறிப்பிட்டுள்ளது. குழுவின் பரிந்துரையின் பிரகாரம் ஜனாதிபதி எடுக்கும் நடவடிக்கை என்னவென்பதை வெளிப்படுத்த வேண்டும்.

பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்கள் பற்றி பல விடயங்களை குறிப்பிட்டு மக்களுக்கு இதனை அறிவுறுத்தியவர்கள் தற்போது இலக்கு வைக்கப்பட்டுள்ளார்கள். பேச்சு சுதந்திரம் திட்டமிட்ட வகையில் மறுக்கப்படுகிறது. அரசாங்கத்துக்கு எதிராக பேசுபவர்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்படுகிறார்கள்.

முறையற்ற வகையில் விடுவிக்கப்பட்ட கொள்கலன்கள் தொடர்பில் ஊடகச் சந்திப்பில் குறிப்பிட்ட விடயத்துக்காக நேற்று முன்தினம் (செவ்வாய்க்கிழமை) கொழும்பு குற்றத்தடுப்பு திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டிருந்தேன். அங்கு சென்று வாக்குமூலமளித்துள்ளேன்.

சிவப்பு முத்திரை பதிக்கப்பட்ட பெரும்பாலான கொள்கலன்கள் எவ்வித பரிசோதனைகளுமின்றி விடுவிக்கப்பட்டமை பாரதூரமானது என்று நாங்கள் குறிப்பிட்ட விடயத்தையே ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவும் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், கடந்த ஜனவரி மாதம் சுங்கத்தில் இயல்பாகவே கொள்கலன்கள் விடுவிப்பில் நெரிசல் ஏற்பட்டதா அல்லது திட்டமிட்ட வகையில் நெரிசல் ஏற்படுத்தப்பட்டதா என்பதில் சந்தேகம் உண்டு என்றும் குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. இதனையே நாங்களும் குறிப்பிட்டோம்.

குழுவின் பரிந்துரையின் பிரகாரம் ஜனாதிபதி எடுக்கும் நடவடிக்கைகள் என்னவென்பதை வெளிப்படுத்த வேண்டும். அரசாங்கத்தின் முறைகேடான செயற்பாடுகள் இறுதியில் அரச அதிகாரிகள்மீது சுமத்தப்படுகிறது. கொள்கலன்கள் விடுவிப்பு விவகாரத்திலும் இதுவே நேர்ந்துள்ளது - என்றார். (ஐ)

# மின்சார சபை சட்டத்தால் எவருக்கும் நன்மையில்லை

## ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஜூலை 11

தேசிய சொத்துகளை பாதுகாக்கும் அதேவேளை மின்சார கட்டணத்தை குறைக்கக்கூடியவாறு புதிய மின்சார சபை சட்டம் தயாரிக்கப்படும் என்று அரசாங்கத்தால் வாக்குறுதியளிக்கப்பட்டது. ஆனால், அரசாங்கம் அந்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறியுள்ளது. திருத்தப்பட்ட சட்ட மூலம் மின்சார சபைக்கோ, அதன் ஊழியர்களுக்கோ அல்லது பாவனையாளர்களுக்கோ எந்த வகையிலும் நன்மை பயக்கக்கூடியதாக இல்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

மின்சார சபையை பங்குகளாகப் பிரித்து அவற்றை சிறிய பிரிவுகளின் கீழ் உள்ளடக்குவதற்கு கடந்த அரசாங்கததால் புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது அந்த மின்சார சபை சட்டத்தை மீண்டும் திருத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. புதிய மின்சார சபை சட்டம் நடைமுறைப் படுத்தப்படுமென ஜனாதிபதித் தேர்தலின் போது தேசிய மக்கள் சக்தி வாக்குறுதியளித்தது. தேசிய சொத்துகளை பாதுகாக்கும் அதேவேளை, மின்சாரக் கட்டணத்தை குறைக்கக் கூடிய வாறு குறித்த சட்டம் தயாரிக்கப்படும் என்று அரசாங்கத்தால் வாக்குறுதியளிக்கப்பட்டது.

ஆனால், அரசாங்கம் அந்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறியுள்ளது. தற்போதைய அரசாங்கம் முன்வைத்துள்ள சட்டமூலம் தொடர்பில் மேல் நீதிமன்றத்தால் கடுமையான திருத்தங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. திருத்தப்பட்ட சட்ட மூலம் மின்சாரசபைக்கோ, அதன் ஊழியர்களுக்கோ அல்லது பாவனையாளர்களுக்கோ எந்த வகையிலும் நன்மை பயக்கக் கூடியதாக இல்லை. இது தொடர்பில் நாம் நீதிமன்றத்திலும், பாராளுமன்ற தெரிவுக்குழுக்களிலும் தெளிவுபடுத்தியிருக்கிறோம்.

நாட்டில் எவ்வாறான தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் எழுதிக் கொடுக்கவில்லை. பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தாத தீர்மானங்களை நடைமுறைப்படுத்துமாறு மாத்திரமே நாணய நிதியம் தெரிவித்துள்ளது. மாறாக சட்டமூலமொன்றை வழங்கி அதனை நடைமுறைப்படுத்துமாறு எதுவும் கூறவில்லை. நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் என்ன என்பதை அரசாங்கம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். என்றும் களுத்துறையில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

## அடுத்த...

பட்ட இந்தக் கலந்துரையாடலில் தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான அனில் ஜெயந்த பெர்னாண்டோ, நிதி அமைச்சின் செயலாளர் ஹர்ஷன சூரியப்பெரும, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, வர்த்தகம், வணிகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கே. ஏ. விமலேந்திராஜா, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹுலங்கமுவ ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)

## இதுவரை 65 எலும்புக்கூடுகள்...

மனிதப் புதைகுழி அகழ்வில் 'தடயவியல் அகழ்வாய்வு தளம் இல. - 1' இலிருந்து 63 எலும்புக்கூடுகளும் 'தடயவியல் அகழ்வாய்வு தளம் இல. - 2' இலிருந்து 2 எலும்புக்கூடுகளும் கண்டறியப்பட்டு, அவை முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

இதேசமயம், 'தடயவியல் அகழ்வாய்வு தளம் இல. - 2' இல் குழப்பகரமான முறையில் மனித எலும்பு சிதிலங்கள் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

மனிதப் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட சகல எலும்புக்கூடுகளும் சட்ட மருத்துவ அதிகாரியின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன. அத்துடன், மீட்கப்பட்ட பை, காலணி, கண்ணாடி வளையல்கள், ஆடைகள், பொம்மை உள்ளிட்ட சான்று பொருட்கள் நீதிமன்ற கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளன.

**கடந்து வந்த பாதை...**

யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றிய பின்னர் செம்மணி பகுதயில் முகாம் அமைக்கப்பட்டிருந்தது. 1996ஆம் ஆண்டு மாணவி கிருஷாந்தி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டார். அவரை தேடிச் சென்ற குடும்பத்தினர், அயலவர் என நால்வர் கொல்லப்பட்டனர். இது தொடர்பான வழக்கில் 6 இராணுவத்தினருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

தண்டனை பெற்றவர்களில் ஒருவரான லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ செம்மணியில் 300 முதல் 400 பேர் வரையானோர் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டனர் என்று கூறினார். 1999ஆம் ஆண்டு செம்மணியில் முன்னெடுக்கப்பட்ட அகழ்வில் 15 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. இதைத் தொடர்ந்து இந்த அகழ்வு பணி நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில், செம்மணியின் தொடர் நிலமாக உள்ள அரியாலை - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் கடந்த பெப்ரவரி 13ஆம் திகதி மின் தகன மேடை அமைப்பதற்காக அத்திபாரம் வெட்டப்பட்டபோது மனித எலும்பு எச்சங்கள் கண்டறியப்பட்டன.

இதைத் தொடர்ந்து நடந்த பரிசோதனைகளில் அவை மனித எலும்புக்கூடுகள் என்று உறுதிப்படுத்தப்பட்டன. இதைத் தொடர்ந்து அந்த இடத்தை அகழ்வதற்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மே 15 ஆம் திகதி ஆரம்பமான முதல் கட்ட அகழ்வு பணிகள் 9 நாட்கள் தொடர்ந்திருந்தன. இதன்போது, 19 எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டு மீட்கப்பட்டன. இதைத் தொடர்ந்து, இரண்டாம் கட்ட அகழ்வு கடந்த ஜூன் 26ஆம் திகதி ஆரம்பமானது. 45 நாட்கள் அகழ்வை மேற்கொள்வதற்கான திட்டமிடல்கள் செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பிரபாகரனின்...

பயன்படுத்தியிருந்தனர். இந்தக் காணியிலுள்ள நிலக்கீழ் பதுங்கு குழியை தலைவர் பிரபாகரன் மற்றும் தளபதிகள் பயன்படுத்தியிருந்தனர் என்று கூறப்படுகிறது.

இந்தப் பதுங்கு குழியில் தங்கம் அல்லது ஆயுதங்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று கூறப்பட்டது. இதைத் தொடர்ந்து, பதுங்கு குழியை அகழ்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. இதையடுத்து நேற்று முன்தினம் சுமார் 20 அடி ஆழமான குழியிலிருந்து தண்ணீர் வெளியேற்றப்பட்டது. இந்த நடவடிக்கையை முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி த. பிரதீபன் பார்வையிட்டிருந்தார்.

அவரின் கட்டளையின் பேரில் நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணி தொடக்கம் அகழ்வு பணி ஆரம்பிக்கப்பட்டது. பிற்பகல் 4.30 மணி வரை தொடர்ந்த ஆய்வில் தகரங்கள் சில மீட்கப்பட்டன. இதைத் தொடர்ந்து அகழ்வு பணியை இடைநிறுத்துவதற்கு நீதிபதி உத்தரவிட்டார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## 30வீத வரி தொடர்பில் அமெரிக்காவுடன் தொடர்ந்து இலங்கை கலந்துரையாடல்



கொழும்பு, ஜூலை 11

இலங்கை அரசாங்கம் பல்வேறு தரப்பினருடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் காரணமாக அமெரிக்கா விதித்த 44 வீத வரியை 30 வீதமாகக் குறைப்பது சாத்தியமானது என நிதி அமைச்சின் செயலாளர் ஹர்ஷன சூரியப்பெரும தெரிவித்துள்ளார்.

மேலும், 30 வீத வரி தொடர்பில் ஒகஸ்ட் முதலாம் திகதி வரை அமெரிக்காவுடன் மேலதிக கலந்துரையாடல்கள் நடைபெறும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## பால் தேநீர் விலையும் உயர்வு

கொழும்பு, ஜூலை 11

இறக்குமதி செய்யப்பட்ட பால் மாவின் விலை அதிகரிக்கப்பட்ட நிலையில், பால் தேநீர் ஒன்றின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்படும் என்று சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

## பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஆட்சேர்ப்பு செயல்முறையில் மாற்றம்

கொழும்பு, ஜூலை 11

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 35 ஆண்டுகளுக்குப் பிறகு ஊழியர்களின் ஆட்சேர்ப்பு செயல்முறையில் மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கலாநிதி மயூர நெட்டிகுமார கூறுகையில்,

கடந்த 2012 இற்குப் பிறகு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 3000 ஊழியர்கள் 2031 இல் அத்தியாவசிய ஊழியர்களாகக் குறைக்கப்படுவார்கள். இந்த ஆட்சேர்ப்புச் செயற்பாடு இதுவரை இருந்த முறைகேடுகளை நீக்கும்-என்றார். (அ)

## மீண்டும் பழைய பாதையில் பயணிக்கிறதா அரசாங்கம்?

கொழும்பு, ஜூலை 11

அரசாங்கம் மக்களால் வெறுக்கப்பட்ட பழைய பாதையில் செல்வதாக சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக ஜூலை 9 அரகலய போராட்டத்தின் செயற்பாட்டாளர் ரொசான் கரவனல்ல தெரிவித்துள்ளார்.

ஜூலை 9 அரகலய போராட்டத்தின் வெற்றியின் மூன்றாவது ஆண்டு நிறைவு மற்றும் போராட்டத்தில் இறந்த மாவீரர்களை நினைவுகூரும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை காலி முகத்திடலில் நடைபெற்றது.

அதில் உரையாற்றிய அவர்- ஜூலை 09 நாட்டு மக்களால் மறக்க முடியாத விசேட தினமாகும். அன்று ஜூலை 05 ஆம் திகதி போராட்டத்தின் எதிர்பார்ப்பு என்ற கொள்கை பிரகடனத்தை வெளியிட்டோம்.

அதில் நாம் முக்கிய ஆறு கொள்கைகளை வெளியிட்டுள்ளோம். அதில் முதலாவதாக கோட்டாபய வெளியேற்றப்பட்டார். ஆனால் அதற்கு பின்னர் நடந்தவை தொடர்பில் திருப்தி கொள்ள முடியாது.

ஆனால் மக்கள் ஒரு தீர்மானம் எடுத்தனர். இவை அனைத்தையும் மாற்ற வேண்டும் என்று புதிய அரசாங்கத்தை பதவியில் அமர்த்தினர்.

இந்நிலையில், அரசாங்கத்திற்கு மக்கள் நிறைய மாற்றங்களை முன்வைத்துள்ளனர். மக்கள் எதிர்பார்த்த மாற்றங்களை அரசாங்கம் செய்ய தவறி மாறான பாதையில் செல்லுமானால் சிவில் செயற்பாட்டாளர்கள் என்ற வகையில் அரசாங்கத்துக்கு நாம் வழிகாட்ட காத்திருக்கிறோம்.

அத்தோடு போராட்டத்தில் நாம் எதிர்பார்த்த ஏனைய கொள்கைகளை நிறைவேற்றிக் கொள்ள அடுத்த கட்டம் தொடர்பிலும் நாம் பேச்சுவார்த்தை நடத்துவோம்-என்றார். (அ)

# படுகொலைகளுக்கு நீதி கிட்டவேண்டும்!

## யாழில் நேற்று மாபெரும் நடைபவனி


யாழ்ப்பாணம், ஜூலை 11

**அனைத்து படுகொலைகளுக்கும், அனைத்து வகை வன்முறைகளுக்கும் எதிராக நீதி கோரும் நடைபயணம் ஒன்று யாழ்ப்பாணத்தில் நேற்று காலை முன்னெடுக்கப்பட்டது.**

வல்லமை சமூக மாற்றத்திற்கான போராட்ட இயக்கம் இப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

அதன்படி, இந்த நடை பயணம் கல்வியங்காட்டுச் சந்தியிலிருந்து யாழ்ப்பாணம் நுழைவாயில் வரை நடைபெற்றது.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், எந்த வன்முறையாலும் எங்களை ஒடுக்க முடியாது, வன்முறை நிறைவுக்கு கொண்டு வருவோம், மண்ணுக்கு கீழ் கொலைகளை புதைக்காதீர்கள், வாழும் உரிமையை அழிக்காதீர்கள், நியாயம் கோருவோம் பயத்தில் வாழ மாட்டோம், நியாயம் கோராத வன்முறைகளும் கொலைகளும் மக்கள் பேரெழுச்சியாக மாறும், கொலைகளுக்கு நீதி வேண்டும்" மன்னிப்பு அல்ல போன்ற வாசகங்கள் அடங்கிய பாதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.



இவ் நடைபயணத்தில் பெருமளவான மக்கள்,சமூக செயற்பாட்டாளர்கள், சிறுவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இலங்கைக்கு 30 வீத வரி!

நியூயோர்க், ஜூலை 11

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் இலங்கை ஏற்றுமதிகளுக்கு 30 வீத வரி விதிக்க முடிவு செய்துள்ளார்.

வெள்ளை மாளிகை இலங்கைக்கு அனுப்பிய கடிதத்தில் புதிய வரி வீதங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்தப் புதிய வரி விதிப்பு ஒகஸ்ட் மாதம் 1 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரவுள்ளது.

முன்னதாக, இலங்கை மீது அமெரிக்க ஜனாதிபதி விதித்திருந்த வரி 44 வீத ஆகும்.

வர்த்தக ஒப்பந்தங்கள் மற்றும் கட்டணங்கள் தொடர்பாக மேலும் ஏழு நாடுகளுக்கு புதிய கடிதங்களை வெளியிடவுள்ளதாக ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் அறிவித்தார்.

இலங்கையைத் தவிர, அல்ஜீரியா, ஈராக் மற்றும் லிபியா ஆகிய நாடுகளுக்கும் 30 வீத வரி விதிக்கப்பட்டுள்ளது.

எனினும், புருனே மற்றும் மால்டோவா ஆகிய நாடுகள் 25 வீத வரிக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. பிலிப்பைன்ஸ் 20 வீத வரிக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. (அ)

## இலங்கைக்குள் விசாரணை ஒருபோதுமே தீர்வை தராது

### கஜேந்திரகுமார் எடுத்துரைப்பு

கொழும்பு, ஜூலை 11

செம்மணி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் பாராளுமன்றில் கருத்துரைத்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நீதியை நிலைநாட்டுவதற்கு சர்வதேச விசாரணையே அவசியமாகவுள்ளதென வலியுறுத்தினார்.

பல வருடங்களாக விசாரணை உள்ளிட்ட அரச செயற்பாடுகளில் அரசியல் தலையீடு காணப்படுகின்றமை அனைவரும் அறிந்ததே. இந்த விடயங்களில் அரச தரப்பின் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. இந்நிலையில்,குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்ற தரப்பினரே எவ்வாறு தமக்கு எதிராக விசாரணைகளை முன்னெடுக்க முடியும் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

இவ்வாறான விடயங்களில் அரச நிறுவனங்கள் இதுவரை சுயாதீனமாக இயங்கியதில்லை.

எனவே, இலங்கைக்குள் விசாரணைகளை நடத்தி தீர்வை பெற முடியும் என்று அரசாங்கம் நினைக்குமாயின்,அது கனவாகவே அமையும் என்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். (அ)

## வெளிவிவகார அமைச்சர் மலேசியாவுக்கு பயணம்!



கொழும்பு, ஜூலை 11

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இரு நாட் கள் உத்தியோகபூர்வ பயணமாக மலேசியா செல்லவுள்ளார்.

மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிம் உள்ளிட்ட அந்நாட்டு அரசாங்கத்தின் முக்கிய பிரமுகர்களை அவர் சந்திக்கவுள்ளார்.

மேலும், அமைச்சர் விஜித ஹேரத் இந்தப் பயணத்தின்போது ஆசிய அமைச்சர்கள் மாநாட்டிலும் பங்கேற்கவுள்ளார். இதன்போது அவுஸ்திரேலிய, ரஷ்ய மற்றும் பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர்களுடனான சந்திப்பிலும் அமைச்சர் விஜித ஹேரத் கலந்து கொள்ளவுள்ளார்.

தென்கொரிய முதல் துணை அமைச்சருடனும் பிலிப்பைன்ஸ் வெளிவிவகார அமைச்சருடனும் சந்திப்பில் ஈடுபடவுள்ளார். இதன்போது இலங்கைக்கும் குறித்த நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஹரக் கட்டாவின் மனைவியும் மலேசியாவில் கைதானார்!

கொழும்பு, ஜூலை 11

பாதாள உலக கும்பலை சேர்ந்தவரும் போதைப் பொருள் கடத்தல்காரருமான "ஹரக் கட்டா" என அழைக்கப்படும் நதுன் சிந்தக விக்கிரமரத்ன என்பவரின் மனைவி மலேசியாவில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

சர்வதேச பொலிஸாரால் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்ட பாதாள உலகக் கும்பலை சேர்ந்த "கெஹெல் பத்தர பத்மே" என்று அழைக்கப்படும் மன்தினு பத்மசிறி பெரேரா ஹேவத் மற்றும் "கொமாண்டோ சலிந்த" ஆகியோர் அடங்கிய குழு ஒன்று மலேசியாவில் வைத்து அந்நாட்டு பொலிஸாரால் நேற்று புதன்கிழமை கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட குழுவில் "ஹரக் கட்டா"வின் மனைவியும் காணப்படுகிறார் என்று கூறப்படுகிறது. (ஐ)

# ட்ரம்பின் அறிவிப்பு காரணமாக ஆடை தொழில்துறை சிக்கலில்!

கொழும்பு, ஜூலை 11

இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்ணயித்துள்ள 30 வீத வரியை விடக் குறைவான வரியை இலங்கையால் நிர்ணயிக்க முடியாவிட்டால் இலங்கையின் ஆடைத் துறைக்கு நெருக்கடி ஏற்படும் என கூட்டு ஆடை சங்க மன்றத்தின் தலைவர் யோஹான் லோரன்ஸ் எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இலங்கையின் ஆடை ஏற்றுமதியில் சுமார் 40 வீதம் அமெரிக்காவுக்கே செல்கிறது. கடந்த ஆண்டு 1.9 பில்லியன் டொலர் வருமானம் அமெரிக்காவுக்கு ஆடை ஏற்றுமதி மூலம் ஈட்டப்பட்டுள்ளது. இலங்கையின் மூன்றாவது பெரிய அந்நியச் செலாவணி அமெரிக்காவிலிருந்தே ஈட்டப்படுகிறது.

வியட்நாம் போன்ற போட்டியாளர்கள் குறைந்த வரிகளை அமெரிக்காவிடமிருந்து பெற்றுள்ளதால் இலங்கை சிக்கலில் உள்ளது. ஆனால், நாம் பேச்சுகளை தொடர முடியும். இத்துறையில் 300,000 இற்கும் அதிகமானோர் பணியாற்றி வருகின்றனர் -என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.07.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org